உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கங.] ராக்ஷஸஹு ஆனிமீ [பகுதி-அ.
Vol. XIII. June—July, 1915. No. 8.

சாஸனமும் தமிழ்ச்சரிதங்களும்.*

தமிழ்நாட்டின் பழையவழக்குகளை அறிவதற்குத் தமிழிலக்கிய இலக்கணங்கள் எவ்வாறு உதவிபுரியக்கூடியனவோ, அவ்வாறே சாஸனங்களும் உதவிபுரியக்கூடியவை. இராசாங்கத்தாராலும் பிறஅறிஞராலும் அவ்வக்காலங்களில்வெளிவரும் சிலாதாமிரசாஸனங்களை ஆராய்ந்துவருவோமானால், சங்கச்செய்யுள்களிலும் பிற்காலநூல்களிலுங்கண்ட சரித்திரங்களும் சொற்பொருண்மரபுகளும் சாஸனஆதரவு பெற்று வலியுறுதலைக்காணலாம். ஆனால், இத்தகைய சாஸனங்கள் பிற்காலத்தவைகளாகவே பெரும்பாலும் கிடைக்கின்றன. 1000, 1200 வருஷங்கட்குமுற்பட்ட செப்புப்பட்டயமோ அல்லது சிலையெழுத்துக்களோ கிடைப்பது தமிழ்நாட்டில் அருமையாகவே இருக்கிறது. இதற்குக்காரணம், பிற்காலத்திற்போல முற்காலத்தே சாஸனம்வரைதல் பிரபலமில்லாதிருந்திருக்கலாம். அன்றிக் கோயில்முதலிய கற்கட்டிடங்களிற்பொறிக்கப்பட்ட பழைய எழுத்துக்கள் பின்னர்ப் புதுப்பிக்கப்பட்டபோதுபிறழ்ந்துஞ் சிதைந்தும்போயிருத்தலுங்கூடும். எங்ஙனமாயினும், சங்ககாலத்திலும் அதன்முன்பும் சாஸனமெழுதும் வழக்கம் தமிழ்நாட்டில் முழுதுங்கிடையாதென்றுசொல்லுவது பொருந்தாது. போரில் இறந்தவீரர்க்கு நடுகல் எனப்படும் வீரக்கல்நட்டுக் கௌரவித்துவந்தவழக்கம் பண்டைக்காலத்திற் பிரபலமாயிருந்ததென்பது, தொல்காப்பியமுதலியவற்றில் அதன்செய்திகள் விவரிக்கப்படுதலால் தெளிவாகின்றது. இத்தகைய கற்களில் இறந்தவீரரது

*இது லெக்ஸிகன் ஆபீஸின் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-மு. ராகவையங்காரவர்களால் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 14-ம்வருஷக்கூட்டத்திற்படிக்குமாறெழுதியனுப்பப்பட்டது.

*

பெயரும் பெருமையும் எழுதி அவர்களைத் தமிழர் சிறப்பித்துவந்த விஷயம், "ஆடவர், பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலி நாட்டிய பெரும்பெயர் நடுகல்" என்னும் அகநானூற்றுப் பகுதியால் விளங்கும். இவ்வாறு பெயரும் பீடும் எழுதலையே தொல்காப்பியனார் "சீர்த்தகு மரபிற் பெரும்படை" என்று கூறுவாராயினர்.* இங்ஙனம் சாஸனம் வரையப்பெற்ற நடுகற்களை இக்காலத்தும் தமிழ்நாட்டில் நாம் காணக் கூடும். இவற்றால், தொல்காப்பியர்காலத்தும் கடைச்சங்கநாளினும் சிலாசாஸனம் வரைதல் ஒருபடியாக வழங்கிவந்ததென்பதே தெளிவாகின்றது.

இச்சாஸனவாராய்ச்சியானது, செந்தமிழறிஞர்களுக்கு இலக்கிய சம்பந்தமாகப் பேருதவிசெய்யக்கூடுமென்பதற்குப் பற்பலசான்றுகள் காட்டலாம். முன்னூல்வழக்குகளில் தம் முழுநம்பிக்கையும்வைக்காது சாஸனப்பிரமாணமொன்றையேமதிக்கும் சரித்திரவறிஞரும் சிலருளர். இன்னோர், தம் கொள்கையில் எவ்வளவு ஊற்றமுடையவராயினும், பழைய இலக்கியங்களிற்கண்ட சரித்திரங்களையும் பிறவழக்குகளையும் ஆதரித்தும் விளக்கியும் வற்புறுத்துவனவாகவே சாஸனங்கள் பெரும்பாலும் வெளிவருவனவாயிருக்கின்றன. இதனால், பண்டை இலக்கியங்களில் நமக்கு மதிப்பு அதிகமாவதோடு, அவைகூறும் செய்தி எதனினும் நம்பிக்கைகொள்ளாது புறக்கணித்தல் பெருந்தவறு என்பதும் நன்கு விளங்குகின்றது. ஆதலால், தமிழாராய்ச்சிக்கு வேண்டற்பாலதாகிய சாஸனவாராய்ச்சியைத் தமிழ்மக்கள் தழுவிக்கொள்ளுதலும் இன்றியமையாததென்னலாம். இனி, சங்கநூல்களினும் பிறவற்றினுங் காணப்படும் அரசர் புலவர்செய்திகளும் பிறவழக்குகளும் சாஸன ஆதரவுபெறுமாற்றைச் சிறிது இங்கு விளக்குவேன்.

புறநானூற்றுள், பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதி என்ற வேந்தனை நெட்டிமையார், காரிகிழார், நெடும்பல்லியத்தனார் என்ற புலவர்கள்பாடியிருத்தல் காணப்படுகின்றது. இப்பாண்டியன், மதுரைக்காஞ்சியிற்புகழப்பட்ட நெடுஞ்செழியனுக்கும் முற்பட்டவன் என்பது,

*பொருளதிகாரம் புறத்திணையியல் 60.

"பல்சாலைமுதுகுடுமியின்
நல்வேள்வித்துறைபோகிய
தொல்லாணைநல்லாசிரியர்
புணர்கூட்டுண்டபுகழ்சால்சிறப்பின்
நிலந்தருதிருவினெடியோன்போல........மகிழ்ந்தினிதுறைமதி"

என மாங்குடிமருதனாரால் அந்நூலுட்பாடப்படுதலால் தெரியலாம். இவ்வாறு பழையபாண்டியருள் முற்பட்டவனாக முதுகுடுமியென்பவன் விளங்கியிருந்தவிஷயம், சமீபத்திற் சாஸன ஆதரவும்பெற்று வலியுறுதல் கவனிக்கத்தக்கது. சிலவருஷங்கட்குமுன், சிலாசாதனபரிசோதகரால் வெளிப்படுத்தப்பட்ட அறிக்கையில், இற்றைக்கு 1150 வருஷங்கட்குமுன் பராந்தகன் என்ற பாண்டியனாற் கோயிலிற்பாடும் பாணனொருவனுக்கு வேள்விகுடி என்ற கிராமம் அளிக்கப்பெற்ற விவரங் கூறும் சாஸனமொன்று பாண்டியவமிசாவளியோடும் வெளியிடப்பட்டிருக்கிறது. 1907-8 Annual report of Assistant Archæological Supdt for Epigraphy. இதனுட்கண்ட பாண்டியர்களுள், பல்யாகசாலைமுதுகுடுமி என்பவன் முதல்வனாகநிறுத்தப்பட்டுள்ளான். இவன், கொற்கைகிழான் நற்கொற்றன் என்ற பாணனொருவனுக்கு வேள்விகுடியை அளித்திருந்தனனென்றும், பிற்காலத்தில் அக்கிராமம் வேற்றரசனாக்கிரமத்தால் இராஜாங்கத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டதென்றும், அப்பாணன்வமிசத்தவனொருவன் இதுவிஷயமாகப் பாண்டியன் பராந்தகனிடம் முறையிட்டுக்கொண்டு அவ்வூரைத் திரும்பப்பெற்றானென்றும் அச்சாஸனங்கூறுகின்றது. இதனாற் புறநானூற்றுட்கண்ட முதுகுடுமிப்பெருவழுதிவரலாறு, பண்டைச்சாஸனத்துப் பயின்று விளங்குதல் தெரியலாம். இவ்வேள்விகுடிச்சாஸனத்துக்கண்ட குறிப்புகளுள்ளே பாண்டியவமிசத்துக்கு ஆதியில் ஆசாரியஸ்தானம் வகித்தவர் அகஸ்தியர் என்றும், தேவர்கட்காக ஒருபாண்டியன் தூதுசென்றான் என்றும் காணப்படுகின்றன. இறையனார்களவியலுரையில், "அரைதருமேகலையன்னமன்னுயன்றகத்தியன்வாய்--உரைதருதீந்தமிழ்கேட்டோனுசிதன்" (89) எனப் பாண்டியனொருவனைப்பற்றிய உதாரணச்செய்யுளும், "அல்லதூஉம், தேவரும் அசுரரும் அமர்செய்தகாலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பலியான் எனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்ததுபோல......சந்துசெய்வித்தலுமொன்று," என்னும் வாக்கியமும் (36-ம் சூத்திரவுரை)

முன்னவற்றோடு முறையே ஒப்பிடத்தக்கவை. பிற்கூறிய, பாண்டியன் தௌத்தியவரலாற்றையே, புகழேந்தியாரும் "நற்றேவர்தூதுநடந்தானும்" என்றுகூறுவாராயினர். இதனை "ஆழிவடிம்பலம்ப" என்னும் நள வெண்பாவுரையில் நன்குவிளக்கியிருக்கிறேன். (செந்தமிழ்த்தொகுதி 6; பக்கம் 254) இனி, முதுகுடுமியின்வமிசத்தவனாகவும் பெருவீரனாகவும், மாங்குடிமருதனார்முதலியபுலவர்களாற் பாடப்பெற்றவனாகவும் விளங்கிய நெடுஞ்செழியன், தலையாலங்கானத்திற் சேரசோழர்முதலிய அரசர்களை வெற்றிகொண்டசெய்தி அகநானூறு புறநானூறுமுதலிய சங்கச்செய்யுள்களில் அதிகமாகப்பாராட்டப்பெற்றுள்ளது. சமீபத்தில் வெளிவந்த சின்னமனூர்த்தாமிரசாஸனத்திற்* கண்ட பழைய பாண்டியர் செய்கைகளுள் தலையாலங்கானத்தே சேரசோழர்கள், பாண்டியர் முன்னோன் ஒருவனால்வெல்லப்பட்டவிஷயங்காணப்படுதல் அறியத்தக்கது. இது சங்கநூல்களிற்கண்டவரலாற்றின் உண்மையை வற்புறுத்துவதன்றோ?

இங்ஙனம் பாண்டியர் பழையவரலாறுகள்போலவே, கரிகாலனும் கோச்செங்கணானும் சேர்மரபு முன்னோர்களாகச் சாஸனத்துக்கூறப்பட்டுள்ளார். (Archæological Survey of S. India Vol. IV) இவ்விருவர்வரலாறுகளும் புறநானூறுமுதலிய சங்கநூல்களால் நன்கறிந்தவை. இவ்வாறே சேரர்விஷயம் சாஸனவழியால் விசேடமாக அறியஇடமில்லையேனும், வடவாரியவேந்தனான சமுத்திரகுப்தன் (கி. பி. 375) சாஸனத்தால், அவன்காலத்திற் கேரளதேசத்தை ஆட்சிபுரிந்தவன் மாந்தரன் என்று கூறப்படுகின்றான். Dr. Fleet's Gupta Inscriptions p. 12, 13. இவன் பரணராற்பாடப்பட்ட மாந்தரம் பொறையன் அல்லது யானைக்கட்சேய்மாந்தரன் என்ற இருவருள் ஒருவனாகவேண்டும். இதற்குரியகாரணங்களை, "சேரன்செங்குட்டுவன்" என்னும்பெயரால் யான்வெளியிட்டநூலுட்காணலாம். (பக்கம் 171)

இவர்களைவிடுத்து, சங்ககாலத்தில்விளங்கிய சிற்றரசர்வரலாறுகள் சாஸனங்களிற்பயில்வனவா? என்பதை நோக்குவோம். பண்டைக்காலத்தே, வள்ளன்மையே ஓருருவெடுத்ததுபோன்றுவிளங்கிய வேள்

---

* Vide Madras G. O. No 503 Public Dated 26—6—07.

பாரியைப்பற்றிக் கேள்விப்படாத தமிழ்மக்கள் எவருமிரார். இவ்வள்ளலுக்கு உயிர்த்துணைவராயிருந்தவர் கபிலர் என்ற புலவர்பெருமான் என்பதும், இப்பாரியைத் தமிழ்வேந்தர்மூவரும் ஒன்றுகூடி வஞ்சித்துக் கொன்றபோது, இப்புலவர் அவ்வள்ளலின் பெண்மக்களிருவரையும் தம்முடனழைத்துக்கொண்டுசென்று, அவர்கட்குத்தக்க மணவாளரைத் தேடி மணம்புரிவிக்கமுயன்றனர் என்பதும், புறநானூற்றுட்கண்ட பாடல்கள்பலவற்றால் தெரியவருகின்றன. இனித் திருக்கோவலூர் வீரட்டானேசுவரர்கோயிற் குமுதப்படைகளிற் பொறிக்கப்பட்டதும், 900 ஆண்டுகட்குமுன்னுண்ட முதலாம் இராஜராஜசோழன்காலத்ததுமான நீண்ட அகவற்சாஸனமொன்றில்,* பாரிமகளிர்மணவிஷயமாகப் புறநானூற்றுட்கண்ட கபிலர்வரலாற்றோடு, பெரும்பாலும் ஒத்தசெய்தி காணப்படுகின்றது. அச்சாஸனப்பகுதி வருமாறு:—

"வன்கரைபொருதுவருபுனற்பெண்ணைத்
தென்கரையுள்ளதுதீர்த்தத்துறையது
மொய்வைத்தியலுமுத்தமிழ்க்கபிலன்
மூரிவண்டடக்கைப்பாரிதன்னடைக்கலப்
பெண்ணைமலையற்குதவிப்பெண்ணை
அலைபுனலழுவத்தந்தரிக்ஷஞ்செல
மினல்புகும்வீடுபேறெண்ணிக்
கனல்புகுங்கபிலக்கல்லதுபுனல்வளர்
பேரெட்டானவீரட்டானம்
அனைத்தினுமநாதியானது"எனக் காண்க.

இவ்வடிகளிலே, தம்முயிர்த்தோழனுன வேள்-பாரியால் அடைக்கலமாக ஒப்பிக்கப்பட்ட அவன்மகளொருத்தியைக் கபிலர் மலையமானுக்கு மணம்புரிவித்துவிட்டுத் தாம் அவ்வள்ளலதுபிரிவுக்காற்றாது "பசைந்தாரிற் றீர்தலிற்றீப்புகுதனன்று" என்றபடி, பெண்ணையாற்றிடையில் அக்கினியிற் பிராயோபவேசம் செய்து உயிர்நீத்த அரியவிஷயம் விவரிக்கப்படுதல் காணலாம். புறநானூற்றுள், 113, 200-2, 236-ம் பாடல்களால், பாரிமகளிரைக் கபிலர் உடனழைத்துச்சென்று, விச்சிக்கோ இருங்கோவேள் என்பவரை மணஞ்செய்துகொள்ளும்படிவேண்டவும் அவர்கள் மறுத்தனராக மனநொந்துசென்ற புலவர்பெருமான்

* ஸ்ரீமான். கோபிநாதராயரவர்களால் வெளியிடப்பட்டது (செந்தமிழ் Vol. 4 P. 232.)

அம்மகளிரைப் பார்ப்பார்சிலரது பாதுகாவலில்வைத்துப் பிராயோபவேசவிரதம்பூண்டார் என்பது அறியப்படும். சாஸனப்பகுதியில் மலையமானுக்குக் கபிலராற் பாரிமகளிர் மணம்புரிவிக்கப்பட்டனரென்ற செய்தி புறநானூற்றுட் காணப்பட்டிலது. ஆயினும் பாரிமகளிரிருவருள் மூத்தவளை மலையற்கு அளித்து, இளையவளைப் பார்ப்பார்ப்படுத்தனர் என்று கருதல் பொருத்தமாகும். இவ்விளையமகளின்மணம் பின்பு ஔவையாரால்முடித்துவைக்கப்பட்டதென்பது தமிழ்நாவலர் சரிதம் முதலிய பின்னூல்களால் ஊகிக்கப்படுகின்றது. "பாரிமக ளங்கவையைக் கொள்ள அரசன்மனமியைந்தான்" என்னும் ஔவைவாக்கில், கபிலர்முடித்த பாரிமகள் மணமேயன்றி வேறுமொருபாரிமகள்மணமும் கூறப்படுதல் அறியத்தக்கது. இதன்விஷயங்களை வேளிர்வரலாற்றுள் "வேள்-பாரி" என்ற பகுதியில் விளக்கிக்காட்டியிருக்கின்றேன்.

இனி, இப்பாரியின்மலையாகப் பண்டைநூல்கள்கூறும் பறம்பு அல்லது பறமலையென்பது பாண்டிநாட்டிலுள்ளதென்பது, "வரிசைத் தமிழ்புனைபாரியும்பாண்டியன்மண்டலமே" என்று பாண்டிமண்டல சதகத்துவருதலால் தெரிகின்றது. இம்மலை, பிரான்மலை என இக்காலத்தார்வழங்கும் கொடுங்குன்றமே என்பது, பழைய சாஸனமொன்றில், அம்மலையிற் கோயில்கொண்ட சிவபிரான் பாரீசுவரர் என வழங்கப்பெறுதலால்* விளங்குகிறது. பாரீசுவரர் என்பதற்குப் பாரிபூசித்த அல்லது பாரிக்கு அருள்புரிந்த ஈசுவரர் என்பது பொருள்; நாகேசுவரர் பட்டீசுவரர் என்பவைபோல. இவற்றால் வள்ளலான பாரியைப்பற்றிய விசேடவரலாறுகள் சாஸனங்கள் மூலமும்தெரியக்கூடியவாயிருத்தல் கண்டுகொள்க.

இனி, பாரியைப்போலவே கடையெழுவள்ளல்களைச்சேர்ந்தவர்களான ஆய், அதிகமான் என்பவர்களதுவமிசங்களைப்பற்றிய சில விசேஷங்களையும் சாஸனங்கள் தெரிவிக்கின்றன. இவருள் ஆய் என்பவன் வேளிர்குலத்தவனென்பதும்,பொதியமலைப்பிரதேசத்துக்குரியவனென்பதும், பெரியகொடையாளி என்பதும், புறநானூற்றுள், உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் முதலிய புலவர்பாடல்களால் அறியப்படும். தாலமி (Ptolomy) என்னும் பூர்வ யவனஆசிரியரும் தாம்

---

* ஸ்ரீமாந்-கோபிநாதராயர் அவர்களால் இவ்விஷயம் அன்போடு எனக்கறிவிக்கப்பட்டது.

பரதகண்டத்தைச்சுற்றிப்பார்த்து எழுதியகுறிப்பில், இவ்வாயின் நாட்டையும் அதனுள் ஐந்து துறைமுகநகரங்களையும்பற்றிக்கூறுவதாகத் தெரிதலால், இவன்வமிசம் 1750 வருஷங்கட்குமுன்பே பிரபலம் பெற்றிருந்ததென்பது பெறப்படுகின்றது. இவ்வாயின் வமிசத்தவரைப் பற்றிய பிற்காலத்துச் சாஸனங்கள்சில, திருவாங்கூர் ஸம்ஸ்தானசாஸன அத்யக்ஷராகிய ஸ்ரீமாந்-து. அ. கோபிநாதராயரவர்களால் வெளிப்படுத்தப்பெறும் திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் ஸீரீஸ் 11,12-ம்பகுதிகளிற் காணப்படுகின்றன.

இச்சாஸனங்களால், கி. பி. 9-ம் நூற்றுண்டில், அஃதாவது 1100 வருஷங்கட்குமுன், ஆட்சிபுரிந்த கோக்கருநந்தடக்கன், விக்ரமாதித்ய வரகுணன் என்ற இரண்டு அரசர்களும் யதுவமிசத்து விருஷ்ணிகுலத்தவர் என்பதும், ஆயின்மரபினரென்பதும், தென்திருவாங்கூராகிய வேணுட்டை ஆண்டவரென்பதும் தெரியவருகின்றன. இவற்றுல், பிற்காலத்தும், வேள்-ஆயின்மரபினர் பிரபல அரசராகவிளங்கியசெய்தி அறியப்படுவதுடன், 'வேளிர் என்போர் கண்ணபிரான் அவதரித்த யதுவமிசத்தவர்களே' என வேறுபலகாரணங்களைக்கொண்டு யான் முன் எழுதிப்போந்தகொள்கையை இச்சாஸனம் வெள்ளிடை மலைபோல் விளக்கிநிற்றலும் காணலாம். இவ்வாறே, புறநானூறு முதலியவற்றில், ஔவையாரால் மிகுதியும் பாடப்பட்ட அதிகமான்வமிசத்தவரைப்பற்றியசெய்தியும் சாஸனத்தாற் றெரிகின்றது. போலூருக்கடுத்த திருமலையிலுள்ளகுகையில்வரையப்பட்ட அடியில் வரும் சாஸனவிஷயம் கவனிக்கத்தக்கது.

ஸ்வஸ்தி ஸ்ரீ சேரவம்சத்து அதிகைமான் எழினிசெய்ததர்மம். யக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந்தருளுவித்து எறிமணியுமிட்டுக் கடப்பேரிக்காலுங்கண்டுகொடுத்தான் "ஸ்ரீமத் கேரளபூப்ருதாயவநிகா நாம் நாஸாதர்ம்மாத்மநாதுண்டீராஹ்வய மண்டலார்ஹஸாகிரௌ யக்ஷேச்வரௌ கல்பிதௌ"..."வஞ்சியர் குலபதி எழினிவகுத்தவியக்கியக்கியரோ-டெஞ்சிய வழிவு திருத்தியிவெண்குணவிறைதிருமலைவைத்தான் அஞ்சிதன் வழிவருமவன்வழி முதலிகலி அதிகனவகன்.........நூல்-விஞ்சையர்...ல புனைதகைமையர் காவலன் விடுகாதழகியபெருமாளே"

இதனால் விடுகாதழகியபெருமாள் என்பவன் அதிகமானெழினி என்னும் குலப்பெயர்தரித்தவனென்பதும், சேரவமிசத்தைச் சேர்ந்தவனென்பதும், வடமொழியில் யவனிகா எனப்பட்டானென்பதும் அறியத்தக்கன. இவனை "அஞ்சிதன்வழிவருமவன்" என இச்சாஸனப் பாடல்குறித்தலால், சங்கநாளில்விளங்கிய அதிகமான் அஞ்சியின் பின்னோன் இவனென்பது தெரியலாம். புறநானூற்றுள், அதிகமானைச் சேரவமிசத்தவனாகவும், பனம்பூமாலையுடையவனாகவும் கூறியிருப்பதற்கு ஏற்ப, 'சேரவம்சத்து அதிகமான் எழினி' எனவும் 'வஞ்சியர் குலபதி' எனவும் சாஸனங்கூறுதல் குறிப்பிடற்பாலது. இவ்வாறு தமிழ்ச்சிற்றரசராகப் பண்டைக்காலத்துவிளங்கியவர்வரலாறுகள் சிலவும் சாஸனவழக்குப்பெற்றுவிளங்குதல் கண்டுகொள்க.

இனித் தமிழ்நூல்களிற் சுருக்கமாக அறியப்படும் மாவலிகள் அல்லது வாணர்கள் சளுக்கர், பல்லவர், முத்தரையர், கங்கர் முதலியோர்வரலாறுகளைச் சாஸனவாராய்ச்சியால் நாம் விவரமாக அறிய இடமுண்டு. மணிமேகலையிலே, சோழன்கிள்ளிவளவன்மனைவியாகிய இராசமாதேவி " மாவலிமருமான்சீர்கெழுதிருமகள் " என்று கூறப்பட்டுள்ளாள். (மணிமேகலை காதை 19 அடி 54) இம்மாவலிமரபினர் இன்னாரென்பதை, மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் அவ்விடத்துக் கீழ்க்குறிப்பிற் சாஸனஆதரவுகாட்டி விளக்கியிருக்கின்றார்கள். இம்மாவலிவமிசத்தோர் பெரும்பாலும் நடுநாடு அல்லது மகதைநாட்டிலிருந்து முற்காலத்து ஆட்சிபுரிந்தவர்கள் என்பதும், பிற்காலத்திற் சோழராது ஆதிக்கத்தால் இவர்கள் வலிசுருங்கினர் என்பதும் சாஸனங்களால் விளங்குகின்றன. இனிச் சளுக்கர் என்பவர் வேளிர் எனத் தமிழ்நூல்கள்கூறும் பிரபலவமிசத்தவர்களே. "தாரகாரியுஞ் சளுக்கியர்வேந்தனும், வேளிலாளனும் வேளெனலாகும்" "வேள்புலவரசர் சளுக்குவேந்தர்" "கேழல்வேள்புலவரசர்கொடியே" எனத் திவாகர முதலிய நிகண்டுகளிலும்,"வேள்குலச்சளுக்கி" எனச் சாஸனங்களிலும் இவர்களைப்பற்றிக்கூறப்படுதல் காணலாம். இன்னோர்வரலாறுகளை நாம் செவ்வனம்தெரியவேண்டுமாயின், அது சாஸனவுதவியாலேயே கிடைக்கத்தக்கது. இவ்வாறே பல்லவர்வரலாறுகளும். தேவாரத்தும். திவ்யப்பிரபந்தத்திலும் இவ்வரசர்விஷயங்கள் அடிக்கடி பேசப்படுகின்றன. பாரதம்பாடிய பெருந்தேவனாரால் தம் நூன்முகப்பில் "தேர்வேந்தர்போர்மாளத்தெள்ளாற்றில்வென்றானே, டியார்வேந்தரேற்பாரெதிர்" என்று பாராட்டப்பட்டவனும் இம்மரபினனாகவே தெரிகிறது.

இவன் கி. பி. 815 முதல் 870 வரை ஆட்சிபுரிந்தவனும், நந்திக்கலம்ப கங்கொண்டவனும், 'தெள்ளாற்றெறிந்த நந்திபோத்தரசர்' எனச் சாஸனத்துக்குறிக்கப்படுபவனுமான பல்லவனேயாவன் என்பது ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்கள்கருத்து. (செந்தமிழ் தொ-5 பக் 61–4.) இனி, நாலடியாரில் முத்தரையரைப்பற்றி இரண்டிடங்களிற் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது.* இன்னோர், தென்னாட்டில் 7, 8-ம் நூற்றாண்டுகளிற் பிரபலம்பெற்ற கள்வர்மரபினராவர். இவ்வமிசத்தவர் சங்ககாலத்திலேயே சிற்றரசராகவிளங்கியவரென்பது, கள்வர்கோமான்புல்லி, கள்வர்கோமான்தென்னவன் என்னும்பெயர்கள் அகநானூற்றுட் பயில்வதனால் அறியப்படும். இனி, கங்கர் என்றமரபினரும் சங்கநாள் முதலே தமிழ்நாட்டையடுத்துப் பிரபலம்பெற்ற அரசர்களேயாவர். "பங்களர்கங்கர்பல்வேற்கட்டியர்" என இளங்கோவடிகளும் இக் கூட்டத்தாரைக் குறிப்பிடுதல்காண்க. (சிலப். 25 156-59) கொங்கு நாட்டையும் மைசூர்ப்பிரதேசத்தையும் முற்காலத்தாட்சிபுரிந்த அரசிற் பெரும்பாலார் இக்கங்கவமிசத்தவர்களே. பவணந்தியாரைக்கொண்டு நன்னூல் இயற்றுவித்த அமராபரணன் சீயகங்கன் இக்கங்கவமிசத்தவனே என்பது அறியத்தக்கது. காஞ்சி ஏகாம்பரநாதஸ்வாமிகோயிலில் இவன் ஒரு 'நுந்தாவிளக்கு' வைத்ததைக்கூறும் சாஸனத்துள் "ஸ்ரீமத் குவளாலபரமேசுவரன், கங்ககுலோத்பவன், சிய்யகங்கன், அமராபரணன்"என்று கூறப்படுகின்றான். இச்சீயகங்கனுக்குத் திருவேகம்பமுடையான் என்பது மறுபெயரென்பதும், இவன் மனைவி அரியபிள்ளையெனப்பெயர்பெற்றவளென்பதும், மூன்றாங்குலோத்துங்கனது 27-வது ஆட்சிவருஷத்தில் அதாவது கி. பி. 1205-ல் இவன் சாஸனம் வரையப்பட்டதென்பதும் விளங்குகின்றன.

இனி, திருமுறைகண்டசோழனை முதல் இராஜராஜன்காலமுதலாக வெளிவந்துள்ளசாஸனங்களை நோக்குமிடத்து அப்பர், சம்பந்தர், சுந்தரர், சேரமான்தேவர்முதலிய சிவனடியார்கட்குக் கோயில்களில் திருவுருவங்கள் அமைக்கப்பட்டும் அணிகலன்முதலியவை அளிக்கப்பெற்றும் போந்தவிவரங்களை விசேடமாகக்காணக்கூடும். இவ்விராஜராஜனுக்கும் முற்பட்ட சோழர்சாஸனங்களில் இம்மூவரைப்பற்றியகுறிப்புக்கள் காணப்பட்டில. ஆயினும், தேவாரப்பதிகங்கள் இராஜராஜன்

* 'பெருமுத்தரையர்' (நாலடி 200)

காலமுதல்மட்டுமென்றி அவனுக்கும்முன்பே வழங்கப்பெற்றும் கோயில்களிற்பாடப்பட்டும்வந்தன என்பது, 9-ம் நூற்றாண்டினனான விஜயநந்திவிக்ரமவர்மன்என்ற பாணவரசன்காலத்துத் திருவல்லத்துப் பில்வநாதேசுவரர்கோயிலிற் பொறிக்கப்பட்ட தமிழ்ச்சாஸனமொன்றில் "திருப்பள்ளித்தாமம்பறிப்பார்க்கும், திருப்பதியம்பாடுவாருள்ளிட்ட பலபணிசெய்வார்க்கும் நெல்லு நானூற்றுக்காடியும்" எனக் (S. I. I. ·) காணப்பட்டிருத்தலால் விசதமாகின்றது. இங்குத் 'திருப்பதியம்' என்பது தேவாரப்பதிகங்களேயே என்பது "ஸ்ரீராஜராஜீசுவரமுடையார்க்கு திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய" (S. I. I. II. p. 254) எனப் பல்லிடத்தும் தேவாரத்தைக்குறித்து இதேசொற் பயிலுதலால் தெளிவாகின்றது. இனி, இவ்விராஜராஜன்மகன் முதலாம்ராஜேந்திரதேவனும் இம்மூவரடியார்வணக்கத்தைச் சிறப்பித்தவனே. மெய்ப்பொருணாயனார்க்கு இவன் ஒரு திருமேனிவகுப்பித்துப் பிரதிஷ்டித்ததை, இவன் சாஸனமொன்று "பாதாதிகேசாந்தம் இருபதிற்றுவிரல் உசரத்து இரண்டுகையுடையராகக் கனமாகச்செய்த 'தத்தா நமரேகாண்' என்ற மி(ம)லாடுடையார் ஒருவர்" (S. I. I. II. No. 28, 29, 40) என்று கூறுதல், அச்சோழன்காலத்தே நாயன்மார்களைப்பற்றியவழக்கு எவ்வளவு பிரசித்தமாயிருந்ததென்பதற்குத் தக்கசான்றாம். இங்ஙனமே ஆழ்வார் அருளிச்செயல்களும், இராஜராஜன்காலத்தும் அவற்குப் பிற்பட்ட சோழர்காலத்தும் பிரபலமாகவழங்கியவைகளேயாம். சைவாபிமானியாகிய இராஜராஜன் ஆழ்வார்களிடத்தும் பக்தி பூண்டு திருப்பணிசெய்தவிவரம் அறியப்பட்டிலதேனும், இவன்காலத்துச் சாஸனங்களில் அத்திருமாலடியார்விஷயங்கள் நன்குபயில்கின்றன. உதாரணமாக—இவன்சாஸனமொன்றில் 'சீகுருகூர்'என்று (S. I. I. II. 269) காணப்படுதல், சடகோபர் அவதரித்த ஆழ்வார்திருநகரி அக்காலத்துப் பிரசித்தமாயிருந்ததைக்குறிப்பிக்கின்றது. அவ்வாறே "ஸ்வஸ்திஸ்ரீ சாலைக்கலமறுத்த கோ இராஜராஜகேசரிவர்மற்கு யாண்டு 13வது........எம்மூர்த் திருவாய்மொழித்தேவற்கு" என உக்கலில் வரையப்பட்ட இவன்காலத்துச்சாஸனம் அச்சடகோபர் அருளிய திருவாய்மொழியின் பிராபல்யத்தைக்காட்டவல்லது. (S. I. I. III. p. 4) இவன்காலத்துச்சாஸனங்களில், இங்ஙனம் சில குறிப்புக்களே காணப்படினும், இவனுக்குப்பிற்பட்ட சோழர்காலத்துச்சாஸனங்கள்

ஆழ்வார்களையும் அவர்கள் அருளிச்செயல்களையும்பற்றித் தெளிவாகக் கூறுகின்றன. முதற்குலோத்துங்கன்காலத்துச்சாஸனமொன்று "அப்பிகைத்தேர்த்திருநாளிலும் பங்குனித்திருநாளிலும் தீர்த்தம் பிரசாதித்தருளின அன்றிராத் திருப்புன்னைக்கீழ் எழுந்தருளியிருந்து 'தேட்டருந்திறல்' கேட்டருளும்போது" (S. I. I. III. 150) என்று கூறுகின்றது. 'தேட்டருந்திறல்'என்பது குலசேகராழ்வார் அருளிய திருமொழியில் இரண்டாம்பதிகத்தின் முதற்குறிப்பாகும். இவ்வாழ்வாரது பாசுரங்கள் தமிழ்நாட்டில்மட்டுமென்றிப் பண்டைநாளில் அந்நிய தேசத்தும் பரவியிருந்தன. பர்மாதேசத்துப் பாகான் (Pagan) நகரத்து ஆலயக்கல்லொன்றில், 1903-ம்வருஷங் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ச்சாஸனமொன்று, டாக்டர்துரையவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. (Epigraphica Indica Vol. VII. p. 197) இச்சாஸனம் மலைநாட்டிலிருந்துசென்ற வியாபாரியொருவரால்-700, 800 வருஷங்கட்கு முன் அங்குள்ள நானாதேசி விண்ணகராழ்வார்கோயிற்குச் சில தர்மங்கள்செய்தசெய்தியைக்குறிக்கின்றது. இச்சாஸனத்தின்தலைப்பில் 'நாஸ்தாதர்ம்மே' என்ற சுலோகமொன்று வரையப்பட்டுள்ளது. இது, குலசேகராழ்வார் அருளிய முகுந்தமாலையில் 5-ம் சுலோகமென்பது பிரசித்தம். இச்சாஸனத்தின்விவரத்தைச் செந்தமிழில் விவரமாக நானே வெளியிட்டிருக்கிறேன். (தொகுதி 7 பகுதி 1.) இதுநிற்க, குலோத்துங்கன்மகனான விக்கிரமசோழன்சாஸனமொன்றில் "கோப் பரகேசரிவன்மரானதிரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்ரமசோழதேவர்க்கு யாண்டு 9-வது ஜயங்கொண்டசோழமண்டலத்து எயிற்கொட்டத்து எயில்நாட்டுத் திருவத்தியூராழ்வாரைப் பாடியருளின ஸ்ரீபூதத்தாழ்வாரும் பொய்கையாழ்வாரும் பிறந்த திருக்கேட்டைநாள்* அருளாளப்பெருமாள் புறப்பட்டருளி" (S. I. I. III. 187)என்று காணப்படுகின்றது. இதனுள் முதலாழ்வார்கள்வரலாறு குறிக்கப்பட்டிருத்தல்காண்க. இவ்வாறே 11-ம் நூற்றாண்டிலிருந்த சோழகேரளதேவன்சாஸன

---

* குருபரம்பரைகளிலும் வழக்கிலும் பொய்கையாழ்வார்க்குத் திருவோணமும், பூதத்தார்க்கு அவிட்டமும் திருநக்ஷத்திரங்களாக வழங்குகின்றன. இச்சாஸனத்தில் அவ்விருவர்க்கும் கேட்டைநாளைக்கூறுவதுபொருந்தவில்லை; ஆதலால் அது திருவாட்டைநாளென்றெழுதப்பட்டிருக்கவேண்டுமென்றுதோன்றுகிறது. மூலசாஸனத்தை உற்றுப்பார்த்துத்தெளியவேண்டும்.

மொன்றில், திருமங்கையாழ்வார் அருளிய திருநெடுந்தாண்டகம் ஆளப் பட்டுள்ளது. ஆகவே, ஆழ்வார்கள்விஷயங்கள் இராஜராஜன்முதலிய சோழர்காலங்களிற்பிரபலமாயிருந்தசெய்தி தெளிவாதல்காண்க. (Epi. Annual Report 1899—900 p. 10).

இங்ஙனமாகவும், டாக்டர் கால்டுவெல்பாதிரியாரும், Prof. சேஷ கிரிசாஸ்திரிகள் போன்றாரும், ஆழ்வார்களை மிகப் பிற்காலத்தவராக எழுதிப்போந்தது, அவர்கட்கு இத்தகையசாஸனங்கள் அகப்படாக் குறையாற்போலும். இராஜராஜன்காலத்தே திருமால் சிவனடியார்கள் வரலாறுகள்வழங்கின என்பதனால், அவ்வடியார்கள்காலமும் அச் சோழன்காலமும் ஒன்றுபோலும் என்று கருதற்க. அவர்கள், சங்க நாளிலும் அதற்குப்பின்பும் இச்சோழனுக்குப் பலநூற்றாண்டுகட்கு முன்பும் இருந்தவர்கள் என்பதற்கு வேண்டியபிரமாணங்கள் அவர்கள் வாக்கினின்றே நாம் காட்டலாம். பெரியாழ்வார் நெடுமாறன் என்ற பாண்டியனையும், திருமங்கைமன்னன் பரமேச்சுவரபல்லவன், வயிர மேகன்முதலியவர்களையும் தம்காலத்தவராகவைத்துப் பாடுதலால், அவர்கள்காலம் இராஜராஜனுக்குமிகவும்முற்பட்டதாதல்தெளிவாகும். பிற்கூறப்பட்ட வயிரமேகன் என்பவன் இராஷ்டிரகூடர்வமிசத்தவ னும், பல்லவனைவென்று கச்சியைப்பிடித்தவனும், கி. பி. 754ல் இருந்த வனுமாகிய தந்திதுர்க்கனே என்பதைச் செந்தமிழில் "திருமங்கையாழ் வார்காலவாராய்ச்சி" என்றவிஷயத்தில் முன்னரேவிளக்கியுள்ளேன். ஸ்ரீமாந்-வெங்கையா அவர்களாலும் இத்தந்திதுர்க்கனே வயிரமேகன் என்பது பின்பு வற்புறுத்தப்பட்டுள்ளது.* இனிப் பிற்காலத்துஅரசர் புலவர்விஷயங்களாகத் தமிழ்நூல்களிற்காணப்படுவனபலவற்றுக்கும் சாஸனவாராய்ச்சி பேருதவியாகும். வீரசோழியம்,கலிங்கத்துப்பரணி, மூவருலா, தக்கயாகப்பரணிமுதலிய தமிழ்நூல்களிற்காணப்படும்

* Of the same King's reign (Govinda) are the Kadali plates of 1812. In these the genealogy begins with Kakka, whose son was Vairamegha. This unusual name for Vairamegha seems to be supported by a inscription of N. Arcot A. S. I. Report 1903—4. See Article by V. Venkaya on irrigation in S. India.

சோழர்வரலாறுகளெல்லாம் சாஸனங்களாற்றான் தெளியவேண்டியன வாகும். ஸ்ரீமாந்-து. அ. கோபிநாதராயரவர்கள் தமிழர்க்கு உபயோக மாக எழுதிய சோழவமிசசரித்திரத்தால் இதனுண்மைபுலப்படக்கூடியது. இனி, புலவர்சம்பந்தமாகவும் சாஸனம் உதவுகின்றது. கம்பரை ஆதரித்த வெண்ணெச்சடையனுக்குமகன் சேதிராயன் என்பது'புதுவை வாழ்சடையனுதவுசேய் - பூதலம்பரவுசேதிபன்' என்னும் தனிப்பாடற் பகுதியால் அறியலாம். இச்சேதிபனையே, கம்பர் ஏரெழுபது அரங் கேற்றும்போது விஷந்தீண்ட அப்புலவர்பெருமான் அவ்விடந்தீரப் பாடி உய்யக்கொண்டது. (செந்தமிழ் தொகுதி 5 பகுதி 2)

இச்சேதிராயன் சடையனுக்கு மகனாகத்தோன்றியசிறப்பை மூவலூர்க்கோயிலிற்கண்ட சாஸனமொன்று

"காவிரியைச்சோணாட்டைக்காராளர்தம்மரபை
நாவலரைக்காவலரைநல்லோரைப்—பூவலய
முள்ளத்தரும்புதுவையூரைச்சிறப்பித்தான்
பிள்ளைப்பெருமாள்பிறந்து"

"பேரோசைப்பிள்ளைப்பெருமானைச்சேதிபனை
காரோசைக்கையானைக்கண்டீரே—பாரோர்
விடுங்கோள்கொடுங்கோள்விளியருள்பூண்டன்ன
மிடுங்கோள்கொடுங்கோளென"

என்ற வெண்பாக்களாற் புகழ்கின்றது. (செந்தமிழ் தொகுதி 5 பக்கம் 57) இதேசாஸனத்தில், கம்பர் சடையப்பவள்ளலின் விருந்தோம் பற்சிறப்பைப்பற்றிப்பாடிய,

"மெய்கழுவிவந்துவிருந்துண்டுமீளுமவர்
கைகழுவநீர்போதுங்காவிரியே—பொய்கழூவும்
போர்வேற்சடையன்புதுவையானில்லறத்தை
யார்போற்றவல்லாரறிந்து"

என்றபாடலும் எழுதப்பட்டிருத்தல் அறியத்தக்கது. இனி, கம்பர் வல்லியெனுந்தாசியைத் திருவொற்றியூரிற்கண்டுசொல்லியதாகத் தமிழ் நாவலர்சரிதையிற்கண்ட,

நடக்கிலன்னமாம்நிற்கினல்வஞ்சியாம்
கிடக்கிலோவியப்பாவைகிடந்ததாம்
தடக்கையான்சதுரானனபண்டிதன்
மடத்துளாள்என்மனத்துறைவல்லியே.

என்றபாடலில் திருவொற்றியூரில் தங்காலத்திருந்த சதுரானனபண்டிதருடையமடத்தைப்பற்றிக்கூறுதல் காணலாம். மூன்றும் இராஜராஜ சோழன் திருவொற்றியூருற்சவத்திற்குச்சென்றிருந்தபோது, சைவாசாரியராகிய சதுரானனபண்டிதரும் வாகீசபண்டிதரும் அங்கிருந்தனர் என்று ஒருசாஸனங்கூறுகின்றது. (Ep. Report 1911—12) சைவாசாரியரான வாகீசபண்டிதர் என்பவர் ஞானாமிர்தநூலாசிரியர்போலும். இவரதாசிரியராதூராகக்கண்ட கோட்டம்பாகை, சென்னையையடுத்த கோட்டம்பாக்கமாகத்தெரிதலால், இப்பண்டிதரும் அவ் உற்சவத்துக்கு வந்திருத்தல் பொருத்தமேயாகும். இக்கம்பர்காலத்தையும் சாஸனவுதவியால் அறியலாகும். காகதீயகணபதிவமிசத்தவனான ஓரங்கற் பிரதாபருத்திரனிடஞ்சென்று, கம்பர்,

அவனிமுழுதுண்டும்அயிராவதத்தின்
பவனிதொழுவார்படுத்தும்—புவனி
உருத்திராநின்னுடையஓரங்கனாட்டிற்
குருத்திராவாழைக்குழாம்.

என்றுபாடிய பாடலொன்று தமிழ்நாவலர்சரிதையிற்காணப்படுகின்றது. இப்பிரதாபருத்திரன்காலம் 1162—1197 என்பது சாஸனங்களால் நன்கறிந்தது. (Sewell's list of Antiquities Madras Vol. I p. 31, 71, 173) இவ்வாறே அருணகிரிநாதர் பிரவுடதேவராயரைத் திருப்புகழிற்பாடுகின்றார். இதனை "உதயதாம மார்பான ப்ரவுடதேவமாராச னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே" (976) எனக்காண்க. இவ்வரசர்சாஸனமொன்று தமிழில்வெளிப்பட்டுள்ளது. (S. I. I. I p. 110) இவர் விஜயநகர அரசருளொருவர்; 15-ம் நூற்றாண்டில் விளங்கியவர். இத்தமிழ்ச்சாஸனம் கி. பி. 1449-ல் எழுதப்பட்டதாம்; ஆகவே, அருணகிரியாரும், அவர்காலத்தவராகவழங்கும் வில்லிபுத்தூரரும், அவ்வில்லிபுத்தூரராற்பாடப்பட்ட வக்கபாகை ஆட்கொண்டானும், அவ்வாட்கொண்டானைப்பாடியவராகத் தமிழ்நாவலர்சரிதையால் அறியப்படும் இரட்டையரும், அப்புலவர்காலத்துவிளங்கிய காளமேகமும் 15-ம்நூற்றாண்டவராதல் புலப்படுகின்றது. இம்மட்டோ? ஸ்ரீமாந்-கோபிநாதராயரவர்களால்,தென்காசியிலாண்ட பாண்டியர்சாஸனங்கள் பாடல்களுடன் செந்தமிழிற் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றால், அதி

வீரராமபாண்டியன், பராக்கிரமபாண்டியன், குலசேகரபாண்டியன்முதலியவர்விஷயங்கள் மிகவும்விளங்குகின்றன. அவற்றை விரிக்கிற்பெருகும். செந்தமிழ்ப்பத்திரிகையைக்கொண்டறிக. இவ்வாறே நீளச்சாஸனவழியேபற்றிச்செல்லுமிடத்துப் பண்டையரசர் புலவர்வரலாறுகளாக எண்ணிறந்தவை அறியத்தடையில்லை.

இதுவரை அரசர்களைப்பற்றிச் சாஸனவழியாகச் சிறிதுகூறினேன். இவைமட்டுமன்றி, சங்கச்செய்யுள்களிற்கண்ட நாடுநகரங்களின் விவரங்களையும் சொற்பொருள்வழக்குகளையும் அறியச் சாஸனம் உதவுமுறையையும் சிறிது விளக்குவேன். சங்க இலக்கியங்களிற் பல்குன்றக் கோட்டம், ஓய்மானாடு, பன்னாடு, வேணாடு, முதலியநாடுகளும், கச்சிப்பேடு, வேம்பற்றூர், நேரிவாயில், கொடுகூர், எயில் முதலியநகர்ங்களும் வழங்குதல் அறியக்கூடும். இவை சாஸனங்களில் அடியில்வரும் விவரப்படிபயிலுதல் அறியத்தக்கது.

பல்குன்றக்கோட்டம். 'பல்குன்றக்கோட்டத்துச்செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன்' என மலைபடுகடாத்திற் குறிப்புக்காணப்படுகிறது. இக்கோட்டம் சாஸனங்களில் மிகுதியும் பயில்வதாம். (S. I. I. I 102-5)வேங்கடக்கூற்றம்,பங்களநாடு, மண்டைக்குலநாடுகள் இக்கோட்டத்தைச்சார்ந்தவை.

பன்னாடு. 'பன்னாடுதந்தபாண்டியன்மாறன்வழுதி' என ஒருபாண்டியன் கூறப்படுதல்காண்க. (புறம்) இந்நாடு மைசூர் இராஜ்யத்துள்அடங்கிய கங்கவாடி 96000–த்தைச்சார்ந்தது. (In Anti. Vol. XVIII p. 410)

எயில்நாடு. (புறம்) இதனுள் காஞ்சீபுரம்முதலியவை அடங்கும். "ஜயங்கொண்டசோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத் திருவத்தியூர்" என்பது சாஸனம். (S. I. I. II 187)

ஓய்மானாடு. ஓய்மான்-ஓயர் அல்லது ஓவியர்தலைவன். சிறுபாணாற்றுப்படைகொண்டநல்லியக்கோடன்இவ்

வோய்மானேயாவன். இவனூராக அவ்வாற்றுப் படையிற்கண்ட கிடங்கிலென்பது இவ்வோய்மா நாட்டைச்சார்ந்தது. (S. I. I. III 146, 201). திண்டிவனம் இந்நாட்டைச்சேர்ந்ததென்பது "ஒய்மானாட்டுக்கிடங்கில் திருத்தண்டீசுவரமுடைய மஹாதேவர்க்கு" என்னும் சாஸனப் பகுதியால் அறியலாம் (திண்டீசுவரம் - திண்டிவனம்)

வேணாடு. இது தென்திருவாங்கூர் இராஜ்யத்துக்கு சாஸனங்களில்வழங்கியபெயர். (Travancore Manual Vol. I 188—9)

கச்சிப்பேடு. 'கச்சிப்பேட்டு நன்னாகையார்' எனக்காண்க. (புறம்) பேட்டை எனச் சில ஊர்கட்கு இக்காலத்துவழங்குவது பேடு என்பதன்திரிபுபோலும். கச்சிப்பேடு என்பது சாஸனங்களில் மிகுதியாகப் பயில்வதாம். (S. I. I. I 113—4)

வேம்பற்றூர். வேம்பற்றூர்க்குமரனார் எனக்காண்க. "இராஜேந்திரசிங்கவளநாட்டு மண்ணிநாட்டு அவனி நாராயணச்சதுர்வேதிமங்கலம்" என்பது சாஸனம். (S. I. I. II p. 317) பாண்டிநாட்டிலும் வேம்பற்றூர் ஒன்றுண்டு.

கிடங்கில். 'கிடங்கிற்கோமான்' என நல்லியக்கோடன் கூறப்படுதல்காண்க. (சிறுபாண். 160.) திண்டிவனம் இக்கிடங்கிற்பிரதேசத்துள் அடங்கும் என்பது "கிடங்கில் திருத்திண்டீசுவரமுடைய மஹாதேவற்கு" என்னும் சாஸனப்பகுதியால் அறியப்படும். திண்டீசுவரம்-திண்டிவனத்திற்குச் சாஸனங்களில்வழங்கும்பெயர்.

நேரிவாயில். "நேரிவாயில்நிலைச்செருவென்று" என்பது பதிற்றுப்பத்தின் 5-ம் பத்துப்பதிகம், இது க்ஷத்திரிய

சிகாமணிவளநாட்டைச்சார்ந்ததென்பது, "க்ஷத்திரியசிகாமணிவளநாட்டுநேர்வாயிலுடையான்... ....வானவன்பல்லவதரையன்" என்ற சாஸனப் பகுதியால் விளங்குகிறது. (S. I. I. Vol. III No. 21).

கோடுகூர். "அக்கரைநண்ணிக்கொடுகூரெறிந்து" என்பது பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்துப்பதிகம். இவ்வூர் பன்னாடுவிஷயத்தின் ஒரு பகுதியாய்ச் சேரமானொருவனுக் குரியதாயிருந்ததென்று, குமார லிங்கசாஸனம் கூறுகின்றது. (Indian Antiquary Vol. XVIII p. 367).

இவ்வாறே இன்னும் பழைய இலக்கியங்களிற்கண்ட நாடுநகரங்களின்செய்திகளை நாம் சாஸனமூலம் தெளிய இடமுண்டு. இங்குச் சிலவே மாதிரிகையாகக்காட்டப்பட்டன. இவையன்றி,'சங்கநூல்களில் வழங்கும் சிலபெயர்வழக்குகளையும் சாஸனங்கள் விளக்குவனவாயிருத்தல் காணலாம். உதாரணமாக—,

பாரதாயன். பதிற்றுப்பத்தின் மூன்றும்பத்தால், பல்யானைச் செல்கெழுகுட்டுவனுக்குப் புரோகிதராகவிளங்கியவர் நெடும்பாரதாயனர் என்பது அறியப்படும். இப்பெயருடனிணைந்த பாரதாயன் என்பதற்குப் பொருள் எளிதில்விளங்கஇடமில்லை. ஆயினும் சோழர்சாஸனமொன்றில், "ஆரிதன்-கேசவன் தனியிளஞ்சிங்கமும் பாரதாயன்கேசவன் அறிவரியானும், பாரதாயன் திருவரங்கநாராயணன் ஸ்ரீகிருஷ்ணனும்" (S. I. I. III 150) என்று கூறப்படுவதிலிருந்து, பாரத்துவாஜன் என்பது உய்த்தறியப்படும். ஏனெனில், அச்சாஸனத்துள் இயற்பெயர்களுடன்கோத்திரப்பெயருமிணைக்கப்படுதலால் என்க. டாக்டர் ஹுல்ஷ் துரையவர்களும் இதனைப் பாரத்துவாசன் என்பதன்திரிபாகவேகருதி எழுதியிருத்தலும் அறியத்தக்கது.

பாலாசிரியன். அகநானூற்றுட்கண்ட சிலபுலவர் 'பாலாசிரியன் இன்னான்' என்று கூறப்படுகின்றனர். பாலாசிரியன் என்பது பாலர்களுக்குக்கற்பிக்கும் ஆசிரியனெனப் பொருள்படும். (இதனால், சிறுவர்க்குப் போதிக்கும் ஆசிரியரும் அக்காலத்துப் பெரும் புலவர்களாகவேஇருந்தமை பெறப்படும்.) இப் பாலாசிரியன் என்னும்வழக்கு, "இப்படிக்கு சாந்தமங்கலத்துப்பாலாசிரியன் இலக்குவணன், சாந்திபாலாசிரியன் வீரநாராயணன்" எனச் சாஸனத்துப்பயிலுதல் அறியத்தக்கது. (S. I. I. III 150).

பேரிளமை. மகளிர்பருவங்களுள் பேரிளம்பெண் என்பது ஒன்றென்பது பலரும் அறிந்தது. இஃது உலக அநுபவம் முதிர்தற்குரிய பருவமாகும். இப் பொருளில் இச்சொல் ஆண்பாலார்க்கும்வழங்குதல், "இப்பரிசு நகரத்தாரும் பேரிளமையாருஞ் சொல்ல எழுதினேன்" என இருமுறை ஒரு சாஸனத்துப் பயில்கின்றமை காணத்தக்கது. (S. I. I. I. 65).

பெருமானடிகள். இது கடவுளைக்குறிக்க வழங்குதல், "மதுரை ஆலவாயிற்பெருமானடிகளாற்செய்யப்பட்ட நூற்கு" எனவரும் இறையனார்களவியலுரை வாக்கியத்தால் அறியலாம். இப்பெருமானடிகள் என்னும்சொல்வழக்கு "திருத்தீக்காலிப்பெருமானடிகளுக்கு" என் றிவ்வாறு பழையசாஸனங்களில் மிகுதியும் பயில்வதாம். (S. I. I. Vol. III 100).

தேவகுலம். இது கோயிலுக்குவழங்குதல், "தேவகுலம்வழி படுவான்தேவகோட்டத்தை எங்குந்துடைத்து" என்னும் இறையனார்களவியலுரைப்பாயிரத்தா லறியலாம். இச்சொல்வழக்கு, "கந்தப்பிரிய

அரசருமகன் கந்தசனன்செய்வித்ததேவகுலம்" என ஒரு பல்லவசாஸனத்துக்காணப்படுதல் அறிக. (S. I. I. II 341).

திருவடிபிடிப்பான். சிலப்பதிகாரத்தில் "அரவணைக்கிடந்தோன் சேடக்குடும்பி" என்பதற்குஅரும்பதவுரைகாரர் 'சேடக்குடும்பி-திருவடிபிடிப்பான்' என்றெழுதினர். திருவடிபிடிப்பான் என்பது, கோயில் அருச்சகனைக்குறிப்பதென்பது, "நடுவிற்கோயிற் றிருவடிபிடிக்கும் ஸ்ரீதரபட்டனும்" என்னும் சாஸனப்பகுதியால் விளங்குகின்றது. திருவடி பிடித்தல்-திருமாலின் திருவடிநிலைகள் (ஸ்ரீ சடகோபம்) தாங்குதல்; அன்றி, ஸ்ரீபாதந்தாங்கி என்று கூறுதலும் பொருந்தும். (S. I. I. III 84)

இங்ஙனமே ஆராய்ந்துசெல்லின் விரியுமாதலின், இம்மட்டோடு நிறுத்துவேன். இதுவரை கூறிப்போந்தவைகளாற் சாஸனவாராய்ச்சி, தமிழ்ச்சரிதங்களையும் மற்றும் பல தமிழ்வழக்குகளையும் அறிவதற்குப் பேருதவி செய்யக்கூடுமென்பது நன்குவிளங்கும். ஆதலால், தமிழறிஞரெல்லாம் இத்துறையினும் பிரவேசித்தல், தமிழாராய்ச்சிபெருகுதற்கு ஏதுவாகுமென்பது திண்ணம். சாஸனபரிசீலனையில்வல்லமேதாவிகள் எடுத்துக்கூறத்தக்க பெரியவிஷயமொன்றை அதனிற்போதிய அறிவில்லாத யான் இம்மஹாஸபையிற் கொணர்ந்ததை அறிஞர் க்ஷமித்துக் கொள்க.

மு. ராகவையங்கார்.

*தமிழ்மொழியும் உயர்தரக்கல்வியும்.

கூரறிவாலும் குன்றாஊக்கத்தாலும் பெரும்புகழும்பிறங்கும் ஸபா நாயகரவர்களே! மற்றும், இங்கு விஜயஞ்செய்துள்ள செந்தமிழ்ப்புலமைச்செல்வமும், செந்தமிழ்வண்மைச்செல்வமும், செந்தமிழ்ப்பற்றுச் செல்வமும்படைத்துள்ள பலதரப்பட்ட பண்புடையாளர்களே!

இப்பேரவையிற் சிறியேன் எடுத்துரைக்கப்புகும்விஷயம் தமிழ் மொழியும் உயர்தரக்கல்வியும் என்பது. இவ்வுபந்யாஸத்தில் உயர்தரக் கல்வி இத்தன்மைத்தென்பதும், நம்நாட்டில் அத்தகைக்கல்வியில் தமிழ் மொழி எத்தகைய இடம்பெறல்வேண்டுமென்பதும், அங்ஙனம் இடம் பெறுதற்குரிய இயற்கையாற்றல் அதற்குளதா என்பதும், உளதாயின் அத்தகைய இடம்பெறுதலால் விளையும்பயன் இன்னஆகலாம் என்பதும் பிறவும் என்னுடையபுல்லறிவிற்கு எட்டியமட்டில் நல்லறிவாளர் சிலருடையகருத்தைத்தழுவி இங்கே சற்று விரித்துரைக்கமுயல்கின்றேன். இச்சபையிலுள்ள பெரியோர்கள் இவ்வுபந்யாசத்திற்காணப் படும் "குணம்நாடிக்குற்றமும்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்ககொளல்" வேண்டும் என்று மிகுந்தபணிவுடன் அவர்களைவேண்டிக்கேட்டுக்கொள் கின்றேன்.

இப்பொழுது நம் தென்னாட்டிலுள்ள உயர்தரக்கல்விச்சாலைகளிலெல்லாம் சென்னைமாகாணத்துரைத்தனத்தாராலும், சென்னை ஸர்வகலாசங்கத்தாராலும் நடத்தப்பெற்றுவரும் பரீக்ஷைகளைக்கருதியே அங்குள்ளமாணாக்கர்கள் கல்விபயின்றுவருகிறார்களென்பதும், இக்கல்விச்சாலைகளில் இவர்களுக்குப் பொதுவாக இலக்கியம், கணிதம், பலவகைப்பட்ட ப்ரகிருதிசாஸ்திரங்கள், சித்திரம், தேகாப்யாஸம் இவை பெரும்பாலும் கற்பிக்கப்பட்டுவருகின்றன என்பதும், இங்குள்ளார் அனைவரும் அறிந்துள்ளார்கள். இங்ஙனம் பல்வகைப்பட்டகலைகளிலும்

---

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினான்காம்வருஷோத்ஸவக்கூட்டத்தில் மகா-ள-ள-ஸ்ரீ திவான்பகதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை, எம். ஏ. எல். எல். பி., பி. எஸ். ஸீ., அவர்களுடைய அக்கிராசனத்தின்கீழ் வாசிக்கப் பெற்றது.

மாணுக்கர்களுக்குப் பழக்கம்செய்வித்தலே இவ்வுபந்யாஸத்தில், உயர் தரக்கல்வியெனச் சுட்டப்பட்டிருக்கிறது. யாதேனும் ஒரேதுறையில் மிகச்சிறந்த புலமையெய்தும்படி மாணுக்கர்களைப் பழக்குவதும் அம் மட்டில் உயர்தரக்கல்வியேயாமெனினும் "ஈண்டு உயர்தரக்கல்வியென் னும் தொடர்மொழி இப்பொருளில் எடுத்தாளப்பட்டிலது. இங்கே குறித்தபொருளில் உயர்தரக்கல்வி மேற்கூறியாங்குப் பற்பலபாடசாலே களிலும் ஊக்கத்துடன் பயிற்றப்பட்டேவருகின்றது. இவ்வுயர்தரக் கல்வியில் தமிழ்க்கல்விசம்பந்தப்பட்டமட்டிற் கவனிக்கத்தக்க சிலவிவ ரங்களை இங்கே எடுத்தியம்புகின்றேன்.

அவைதாம்:—

i. இலக்கியத்தில் தமிழ்ப்பாடம்நீங்கலாக எல்லாக்கலைகளும் இங்கிலீஷ்ப் பாஷைமூலமாகப்பயிற்றப்படுதல்.

ii. இத்தமிழிலக்கியந்தானும் மாணுக்கர்கட்கு இன்றியமையாப்பாடமா யிராமல் இஷ்டமாளுல் எடுத்துக்கொள்ளும்பாடமாக ஏற்பட்டிருத்தல்.

iii. பாடஜாப்தாவில் தமிழில் வ்யாஸமெழுதல்மாத்திரமே கட்டாயப்பாட மாயிருத்தல். இதுவும் காலேஜ்களில் ஸம்ஸ்கிருதமொழிபெயர்ப்பை இப்பாடத் திற்குமாற்ருக மாணுக்கர்கள் அமைத்துக்கொள்ளாதவரையில்.

இவற்றை ஒவ்வொன்ருக மேனுேக்காகநோக்குவோர்க்கும் நம் தாய்மொழி நம்நாட்டில்நடைபெறும் உயர்தரக்கல்வியில் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்பது தெள்ளிதிற்புலப்படும்.

இனித் தமிழ்மொழிக்கும், உயர்தரக்கல்விக்கும் எத்தகைய இயைபு இருத்தல்வேண்டுமென்பதைக்கூறுவேன்.

ஆங்கில இலக்கியம் நம் கல்விச்சாலைகளில் முக்யபாடங்களுள் ஒன்ருயிருத்தலும், சிலகாலம்வரை சிலசாஸ்திர நூல்கள் ஆங்கிலபாஷை மூலமாகக் கற்பிக்கப்படுதலுந்தவிர, மற்ற எல்லாப்பாடங்களும் உயர் தரக்கல்விபயிலுவோர்க்குத் தமிழ்ப்பாஷைமூலமாகக்கற்பிக்கப்பட வேண்டும். இதுவே நம்தமிழ்நாட்டில் தேசபாஷை பல்வழியிலும் செழித்துவளர்தற்கும் கல்வியும் நாகரிகமும் மேம்படுதற்கும் நேரியவழி யாகும். இவ்விஷயம் பற்பல ஆக்ஷேபணைகளுக் கிடந்தருமென்பதும், இது எளிதில் ஸித்திபெறத்தக்கதன்று என்பதும் உண்மையே. அவ் வாக்ஷேபங்களின் முக்யாம்சங்களை இங்கு எடுத்தோதி அவற்றிற்கு

ஸமாதானங்கூறுவது ஈண்டைக்குப்பொருத்தமுடையதாகும். ஆக்ஷேபங்களில் அதிமுக்யமானவை இரண்டு. அவையாவன (1) தாய்மொழி வாயிலாகக் கல்விகற்பித்தால், நம்நாட்டார்க்கு ஆங்கிலமொழியிற்பாண்டித்யமும், மேனுட்டு நவீனசரித்திரசாஸ்த்ரஆராய்ச்சிகளால் நம்மவர்க்குண்டாகும் நற்பயனும் குறைவுபடுமென்பது. (2) தமிழ்ப்பாஷை பற்பல கலைகளையும் நன்குவிளக்கிப்போதிப்பதற்குத் தகுந்த ஆற்றலிலது என்பது. இவையிரண்டும் பேய்த்தேர்போன்ற போலிக்கூற்றுக்களாமாறு இங்கு விளக்குவேன்.

தமிழ்மொழிவாயிலாக உயர்தரக்கல்விகற்பிக்கவேண்டுமென்று கூறியதுடன், புறனடையாக, **ஆங்கிலஇலக்கியமும் சிலகாலம்வரை சில சாஸ்திரநூல்களுந்தவிர**, என்று கூறியுள்ளது கவனிக்கற்பாலது. ஆங்கில பாஷையை நம்கல்விச்சாலைகளிற் கட்டாயபாடங்களில் முக்கியமாவதொன்றுய்ச்செய்து, அந்தப்பாடத்தைத் தகுந்த வித்வான்களைக் கொண்டுபோதித்துவந்தால், இயல்பாகவே எவர்க்கும் ராஜபாஷையின் மீதுள்ளமோஹமும், நற்கல்வியின்பயனாக அதன்கண் அமைந்துள்ள நன்னூல்களைக்கற்றுக்கொள்வதிற் படிப்பவர்க்கு இயல்பாய்எழும் தாபமும் நிலைத்திருக்கும்வரை, நம்மாணுக்கர்கட்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி குறைவுபடும் என்பது கொள்ளத்தக்கதன்று.

இனித் தமிழ்மொழிவாயிலாக உயர்தரக்கல்விபயிற்றமுடியாதென்பது எவ்வளவுபொருத்தமுடையது என்பதைப் பார்ப்போம். இதுவே, ஆங்கிலமுணர்ந்த அறிவாளர்களிற் பெரும்பாலர் ஆழ்ந்துயோசியாமற் கூறும், ஒரு பலத்தஆக்ஷேபம். இது தமிழ்மொழியின்இயல்பையும் தமிழ்நூல்களின்பெருமையையும் தக்கபடி உணராத தவற்றினுலேயே எழுவது. இயற்கைநலம் இலங்கச் செஞ்சொற்களில்அமைந்துள்ள **சங்கநூல்களும்** ஒழுக்கமே உயிரினும் ஓம்பத்தகுவது என்று இடித்துரைக்கும் எண்ணில்லாத பலநீதிநூல்களும்" பத்திச்சுவைநனிசொட்டச்சொட்டப்பாடப்பெற்ற பாக்கள்நிறைந்துள்ள மதசம்பந்தமான கிரந்தங்களும் கற்பனைநயமும் சொற்பொருணயமும்கலந்து கற்றோர் மனதைக்காமுறுக்கும் காவியநூல்களும், நம்தமிழில் எத்துணைச்சிறப்பாகஅமைந்துள்ளன? பண்டைத்தமிழ்நூல்களிற் பலவற்றைப் பரோபகாரமாகவெளிப்படுத்தியுள்ள **பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாயர் உ. வே. சாமிநாதஐயரவர்களும்,** காலஞ்சென்ற **ராவ்பஹதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும்,** புதுவழியில் தமிழ்நூல்கள்புனைந்து

வெளியிட்ட பிரஹ்மஸ்ரீ வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்களும் தங்கள்பதிப்புநூல்களுக் கெழுதியுள்ள ஆராய்ச்சிமுகவுரைகளைநோக்கு வோர்க்குத் தமிழ்மொழியினது பொருள்விளக்குமாற்றல் நன்குபுலப் படும். மற்றும் ஆங்கிலமும் தமிழும்வல்லவர்களாய் அருந்தமிழ்நூல்க ளியற்றிப் பெரும்புகழ்படைத்த மகாராஜராஜஸ்ரீ வேதநாயகம் பிள்ளையவர்களுடைய "ஸர்வஸமயசமரஸகீர்த்தனை, நீதிநூல், பெண் மதிமாலை, பிரதாபமுதலியார்சரித்ரம்" முதலிய நூல்களையும், ஸ்ரீமான் அ. மாதவையர் B. A. அவர்களும், பண்டிதர் S. C. நடேசசாஸ்திரியா ரவர்களும் இயற்றியுள்ள பற்பல தமிழ்நாவல்களையும் படித்துப்பார்த் தால் தமிழ்மொழியில் நவீனக்கருத்துக்கள் நயம்பட இயங்குதல் அங் கையங்கனியென அறியக்கிடக்கின்றது. தமிழ்ப்பாஷையின் இயலமைப் பும் இலக்கணஅமைப்பும் வேண்டுழி வேண்டியாங்கு வேண்டியபுதுச் சொற்கள் சொற்றொடர்கள்முதலியவற்றைத்தமிழ்மொழியிற் பொருள் விளக்கமுற அமைத்துக்கொள்வதற்கு ஏற்றனவாக இருக்கின்றன. இத னோடு ஸமயம்நேரும்போது ஸம்ஸ்கிருதத்தின் நல்லுதவியும் தமிழுக்கு வாய்க்கிறபடியால், தமிழ்மொழியால் நம்மவர்க்கு உயர்தரக்கல்வி பயிற்றமுடியாதென்பது ஒப்புக்கொள்ளத்தக்கதன்று.

புதுமாறுதல்கள் ஏற்படும்போதெல்லாம் அதிலும் தமிழ்ஸம்பந் தப்பட்டதென்றால், இவ்வித ஆக்ஷேபங்களைப்புகல்வது புலிநிறைமாந் தர்க்கு வழக்கமாய்விட்டது. முதன்முதல் தமிழில் சுதேசமித்திரன் பத்திரிகையை நடாத்தத்தொடங்கியபோது, அம்முயற்சி வீணாகு மென்றுகருதி, நமது தென்னாட்டுத்தேசபக்தசிரோமணியாகும் பிரஹ் மஸ்ரீ ஜி. ஸுப்ரமண்யஐயரவர்களுடைய புத்தியின்மைக்கு இரங்கிய புத்திமான்கள்பலர். இப்போது அம்மித்திரன் சற்றுமுன்பின் முப்ப தாண்டுகளாகத் தமிழ்நாட்டில் நல்லொளிபரப்பிவிளங்குகிறதுபற்றி, அதன்முற்போக்கைப் பின்பற்றி இன்னும்சில தமிழ்ப்பத்திரிகைகளும் இயன்றவரை ஒழுங்காகநடைபெறுகின்றன. இப்பத்திரிகைகளால் ராஜாங்கவிஷயமாகவும் சரித்ரசாஸ்திரவிஷயமாகவும் வழக்காறுபெற்ற வார்த்தைகள் பலவன்றோ? அவற்றாற் பல்லாயிரக்கணக்காகுந்தமிழ் மக்கள் பயனடைந்திருக்கின்றனரன்றோ? ஏரோபிளேனுக்கும் (Aeroplane) ஸப்மேரினுக்கும் (Submarine) ஸமீபகாலத்தில் ஒவ்வொன் றற்கும் இவ்விரண்டுதமிழ்மொழிகள் ஆகாயவிமானம் ஆகாயக்கப்பல்

என்றும், நீர்முழுகி துளைபடகு என்றும் ஏற்பட்டுள்ளதை உற்றுநோக்கின் "சேணிற்பறக்கின்றசெந்தமிழ்க்குதிரைமுன் திட்டேதுதட்டேது காண்" என்று ஒருபுலவர்கூறியபடி, தமிழ்மொழியின் இயக்கவன்மை எளிதில்அறியலாகும். உண்மை இஃதாயினும், தமிழ்மொழியினை உயர்தரக்கல்விக்கு உபகாரமாக்குதலைப்பற்றி எதிர்வாதம் பலத்ததாகவேயிருக்கிறது. எனினும் நுண்ணுணர்வோடு தமிழ்மொழியின் இயற்கை வலியையும், தற்காலத்தில் அதற்குஅநுகூலமாக ஏற்பட்டுள்ள புறச்சாதனங்களையும் ஆழ்ந்துசிந்திப்போர்க்கு, தமிழ்மொழிவாயிலாக உயர்தரக்கல்விபயிற்றுவதில் அந்தப்பாஷையின் இயற்கையமைப்பினுல் ஏற்படக்கூடிய விசேஷப்ரதிகூல மொன்றுமில்லை என்பது இதுகாறும் விரித்துக்கூறியவாற்றுல் விளக்கப்பட்டது.

ஒருசாரார் நன்றுகூறினீர்; ஏதேதோ ஆகாயக்கோட்டைகட்டுகிறீரே. உயர்தரக்கல்வியைத் தமிழ்மொழியிற்பயிற்றுதற்கு அம்மொழியிற் கணிதம் சரித்ரம் சாஸ்திரம் இவற்றில் தக்கநூல்கள் இல்லையே. இதற்கென்செய்வீர்? என்றுகூறுவர். இன்னோர்க்கு யாமுரைக்கற்பாலது யாதெனில், நாம் இவ்விஷயத்தில் எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கம்செலுத்துகின்றேமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் நாம்விரும்பும் புஸ்தகங்கள் வெளிவரும் என்பதே. நமது ஆந்த்ரஸகோதரர்கள் இவ்விஷயத்திற் பேரூக்கங்கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மிற்பலர் அறிவோம். அவர்கள் ஆந்த்ரபாஷையின் அபிவிருத்திக்காக ஒன்றுசேர்ந்து முயல்வதன் பயனாக விஞ்ஞானசந்திரிகாமாலிகை என்னும் பேரால் வெளிப்படுத்தியுள்ள சரித்ரசாஸ்திரசம்பந்தப்பட்ட பலநூல்கள் மிகச்சிறந்தனவாக வெளிவந்திருப்பதுடன், இவற்றைத் தெலுங்குநாட்டிலுள்ள கல்விச்சாலைகளிலும் புஸ்தகசாலைகளிலும் வாங்கிவைப்பதையும் ஆசிரியர்களும் மாணாக்கர்களும் அவாவுடன் இந்நூல்களைப்படித்துப் பயனுறுதலையும் யான் கண்கூடாகக்கண்டுள்ளேன். நீரில்இறங்கித் திளைத்தாடினன்றே நீந்துதலிற் பழக்கம் கைவரும். அன்றி நீந்தத் தெரிந்தபின்னரே நீரில் இறங்கவேண்டும் என்று காத்திருப்பதும் இவ்விஷயத்திற் புஸ்தகங்கள் ஏற்படவேண்டுமென்று போக்குச்சொல்லுவதும் ஒரேதன்மையினவாகும்.

ஆதலின் இன்னோரன்ன ஆக்ஷேபங்கள் உண்மையில் ஆதாரமற்றவைகளாய் ஒழிகின்றன.

இனித் தமிழ்மொழிமூலமாகக் கல்விகற்பித்தலால் விளையக்கூடிய நன்மைகளைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

அவற்றுள் முதல்தரமான நற்பயன் யாதெனில் மாணுக்கர்கள் புதுவிஷயங்களைத் தாய்ப்பாஷையிற் கற்றுக்கொண்டால் வேற்றுப் பாஷையிற் கற்றுக்கொள்வதைப்பார்க்கிலும் **விரைவாகவும் விளக்கமாகவும்** அறிவுமுதிர்வார்கள் என்பதே. இப்போது ஸாதாரணமாக ஒருமாணுக்கன் ஆங்கிலபாஷையிலுள்ள ஒருநூலினைத் தானுகவே மெய்ப்பொருளுணர்ந்துபடிப்பதற்குக் குறைந்தது ஏழு எட்டுவருஷம் அவனுக்கு அப்பாஷையிற் பழக்கம்வேண்டியிருக்கிறது. இப்படித் தேர்ச்சியுறும்வரை மாணவர்களுக்கு இங்கிலீஷ்ப்புஸ்தகவாயிலாகக் கிடைக்கும் அறிவு தெள்ளறிவென்பதற்குஇடமில்லை. இவ்வளவுகாலத்திலும் தேசபாஷைமூலமாக இவர்கள் பலவகைப்பட்டபாடங்களைப் படித்துவந்தால் இவர்களுக்கு இவ்விப்பாடங்களில் மிகுந்ததேர்ச்சியுண்டாகுமன்றே? அங்ஙனமாயின் நம்நாட்டிற் சில்லாண்டுகளேகல்வி பயின்று அரைப்படிப்புடன் படிப்பைநிறுத்திவிடுவோர்கள் தம்மறிவைத் தமிழ்நூல்களால் விருத்திசெய்துகொண்டு தமக்கும் பிறர்க்கும் பயன்படத்தக்கநற்றுறைகளில் தம்வாழ்நாட்களை இனிதுகழித்தல் இயலுமன்றே?

அன்றியும் தேசபாஷையிற் கல்விகற்பிக்கப்படின் நாளடைவில் அதன் நற்பயனுக அரசியலிலும், ஆங்கில அதிகாரிகள் நடாத்தும் தலைமைசான்றவிஷயங்களில்தவிர மற்ற எல்லாவற்றிலும் தேசபாஷை வழங்கப்படுதலும் ஸாத்யமாகும். அப்படியாகுங்கால் இப்போது எடுத்ததெல்லாம்இங்கிலீஷில்நடக்கும் ராஜாங்கநடவடிக்கைகள் தமக்கு ஒன்றுந்தெரியாததனுல் நம் ஜனங்கள் அடையும் அயர்வும் மயர்வும், அவைகாரணமாக அவர்கள் நமது காருண்ய கவர்ன்மெண்டாருடைய நன்னோக்கங்களை முழுதும் உணரப்பெறுது பல்லாற்றுனும் தம்மைப் பட்டப்பகலில் ஏமாற்றிப் பணம்பறிக்கும் பற்பல போலியுத்யோகஸ்தர்களுக்குத் தம்பொருளைத் தாமே வீணில் வலியக்கொட்டியளப்பதுமன்றி, அவரைக்காணும்போதெல்லாம் கைகட்டி வாய்புதைத்து மெய்ந்நடுங்கி உறுந்துயரும் படிப்படியாகக் குறைவுபடுமென்பதும் திண்ணம். ஜனங்களும் தங்கள்நிலைமை உரிமை இவற்றை உள்ளபடி

உணர்ந்துகொள்ளுவார்கள். இவ்வாறு தாய்மொழியில் உயர்தரக்கல்வி பயிற்றுதலாற் பொதுஜனங்களுக்குப் பற்பலவழியிலும் நன்மையே விளையும் என்பதில் ஐயமில்லை. பற்பல பகர்வதென்! சரித்ர ஆராய்ச்சி மட்டில் தொன்மைக்காலந்தொட்டு எந்தநாட்டிலும் எக்காலத்திலும், தாய்ப்பாஷைமூலமாகவன்றிக் கல்விச்செல்வம் நிரந்தரப்பெருவாழ் வுற்றதில்லை என்பது அறிஞர்கட்கெல்லாம் ஒப்பமுடிந்ததே.

இதுபற்றியே நம்நாட்டுப்பிரமுகர்களிற் சிலர் இவ்விஷயத்தில் இப்போது ஊக்கங்காட்டிவருகிறார்கள். 3 மாதத்திற்குமுன் இதைப் பற்றித் துரைத்தனத்தார் ஆலோசனைபுரியவேண்டுமென்று, ராஜப்ரதி நிதியவர்களுடைய சட்டநிரூபணசபையில் நமது சென்னைமாகாண ப்ரதிநிதியாகிய கனம் ராமராயனிங்கார் அவர்களால் வேண்டப் பட்டது. அச்சபையிலுள்ள சில கனவான்கள் அப்போது அதற்கு எதிருரைகூறி அதனைமறுத்தபோதிலும், மற்றுஞ்சிலர் நேருரைகூறி அதன்பயனை விளக்கிக்காட்டினார்கள். இறுதியில் அப்பேரவையிற் கல்வியதிகாரியாகிய கனம் ஸர் ஹார்கோர்ட்பட்லர் அவர்கள் இவ்விஷ யம் நிகழும் ஐரோப்பியப்பெரும்போர் முடிவுறும்வரை நிறுத்திவைக் கப்பெறும் என்றும், அதன்பின்னர் இந்தியாவிலுள்ள உள்நாட்டு மாகாண அதிகாரிகளுடையயோசனை இந்தவிஷயத்தில் விசாரித் தறியப்படுமென்றும் விடையளித்திருக்கின்றார்கள். ஆங்கிலேயராஜ்யம் அதிவிரைவில் இக்கொடும்போரில் வெற்றிபூண்டுவிளங்குமென்றும், இப்போது ராஜப்ரதிநிதியாரின் சீரவையிற் கல்வியிலாகாத்தலைமை யாகிய அரும்பெறற்பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கும் கனம் ஸர் வி. சங்கரநாயர் அவர்கள் இவ்விஷயத்திற் கவனம்செலுத்துவார்கள் என்றும் நாம் ஆவலுற்று எதிர்பார்ப்போமாக.

மற்றும் நமது சென்னை உயர்தரநீதிஸ்தலத்தில் நீதிபதியாய்விளங் குபவரும் கல்விவிஷயத்தில் மிக்க கவனம்செலுத்துபவரும் ஆகிய கனம் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரிஐயர் அவர்கள் சின்னாட்குமுன் சென்னை ஹிந்துஹைஸ்கூலிற்கூடிய ஒருகூட்டத்தில் தலைமைவகித்தபோது தமதுபிரசங்கத்தில் இக்கருத்தைவெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் இக்கருத்தைவெளியிட்டிருப்பதை 20—4—15-ல் சென்னைச் சுதேச மித்திரன்பத்திரிகை கீழ்க்குறித்துள்ளபடி பாராட்டித் தலைப்புவியாசம் எழுதியிருக்கிறது.

"தமிழ்ப்பாஷையை அபிவ்ருத்திசெய்ய பி.ஏ. பரீஷைக்குத் தமிழ்ப்பாடங்கள் ஏற்படுத்துவதைக்கூட அவர் (கனம் ஜட்ஜ் அவர்கள்) அவ்வளவுபெரிதாய் நினைக்கவில்லை. இம்மாகாண சக்கண்டரிஸ்கூல்களிற் பாஷைப்பாடங்க ளல்லாதபாடங்கள் தமிழிலேயே சொல்லிவைக்கப்படுவதற்கு வழியைத்தேட வேண்டுமென்றார்.........கவர்ன்மெண்டாரின் அநுமதியை (இவ்விஷயத்தில்) பெற, அவர்களுக்கு.........பொதுஜனங்களும் பெற்றோர்களும் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமென்றார்.........படித்த இந்தியர்கள் தேசபாஷைகளை விருத்திசெய்யவேண்டுமென்றுசொல்லுவார்களேதவிர அவைகளை இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகும்படி விட்டுவிடவேண்டுமென்றுசொல்லமாட்டார்கள். ஆனால் அவர்கள் தேசபாஷைகளை விருத்திசெய்யவேண்டுமென்று சொல்லுகிறபடியே விருத்திசெய்துகாட்டுவார்களோ என்றால், தாங்களே முன்னுக்குவந்து விருத்திசெய்துகாட்டப் பலருக்குச் சௌகரியங்கள் இருப்பதுமில்லை, சமயங்கள்வாய்ப்பதுமில்லை. தன்னலமறப்புக்காட்டி வேலைசெய்யக் கூடியசிலருக்கே சௌகரியங்களிருக்கும், சமயமும்வாய்க்கும். அப்படிப்பட்டவர்கள் முன்னுக்குவந்து வேலைசெய்யத்தலைப்படுவார்களானால் அக்கரைமட்டுமிருக்கச் சௌகரியங்களில்லாதவர்களும்,சமயங்கள்வாயாதவர்களும்அவர்களுக்கு உற்ற பின்பலமாக நிற்பார்கள்."

மற்றும் நம்நாட்டிற் பல்லாற்றானும் முன்னாட்டத்தக்கவர்களாகிய கனம் ஸர் குருதாஸ்பானர்ஜி, ஜஸ்டிஸ் அஷுடோஷ்முக்கர்ஜி, ஸர் எஸ். ஸுப்ரமண்ய ஐயர், ஸர் பி. எஸ். சிவசுவாமி ஐயர், ஸ்ரீமதி அனி பெஸண்ட் அம்மையார் முதலிய பெரியோர்களும் இந்த நோக்கத்தில் ஒருவாறு ஒற்றுமைப்பட்ட உள்ளக்கருத்துடையவர்களாகக்கொள்ளத் தடையில்லை. மேலும், சிறிதுகாலமாக நம்நாட்டிற் பல உயர்தரப் பத்திரிகைகளும் இவ்விஷயத்தைப் பரிசீலனைசெய்துவருகின்றன. நானறிந்தவரையில், கல்கத்தா மாடர்ன் ரிவ்யூ, சென்னை எட்யுகேஷன் ரிவ்யூ, மதுரைச் செந்தமிழ், சென்னைச் சுதேசமித்திரன் இப்பத்திரிகைகளில் இவ்விஷயத்திற்கு அனுகூலமாக நிருபநேயர்கள் விஷயம் எழுதி விரித்துள்ளவியாசங்கள் வெளிப்போந்துள்ளன.

இவையெல்லாம் நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கும் நற்கருமத்தின் முற்குறியாகக்கொள்ளற்பாலன. எனினும் கார்யஸித்தி பெறுவது நம்முடைய விடாமுயற்சியையும் ஊக்கத்தையும் பொறுத்திருக்கிறது. இம்முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில் தொடக்கத்தில் எத்துணையோ இடையூறுகளும் இன்னல்களும் ஏற்படத்தான்செய்யும். இம்முறையை எவ்வாறு படிப்படியாக

அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது என்னும்விஷயந் தானே ஒரு உபந்யாசத்துக்கிடந்தரத்தக்கதாகலின் அதனை விரிவஞ்சி இங்கேவிளக்காதுவிடுக்கின்றேன். ப்ரஸ்தாபவிஷயத்தை அநுஷ்டானமுறையாகச் செய்வது அஸாத்யமில்லையென்பது பி றி தே ா ரி ட த் து இவ் வியாஸத்தில் வற்புறுத்திக் கூறப்பெற்றுள்ளது. இவ்வேற்பாட்டை அநுபவமுறையாக்கும் நன்முயற்சிக்கு ஏற்படக்கூடிய தடைகளையும், அவைபிறவற்றைத் தடுக்கும்வழிகளையும்பற்றி நம்நாட்டுப்பேரறிவாளர்கள் இடைவிடாது துரைத்தனத்தார்க்கு யோசனைகூறவேண்டும். இப்படி நாம் பற்பலவழிகளிலும் பாடுபடவேண்டும். தொடக்கத்தில் இம் முயற்சியாற் பலமுறை பயனுறாதுபோயினும் மீண்டும்மீண்டும் உழைப்பதே நம்கடன்; உறுபயன்விழைதல்பற்றிக் கவலையடையவேண்டா என்னும் பகவத்கீதையின் உபதேசத்திற்கிணங்க நம்மவர்களில் அறியாதார்க்கும் நம்மை அன்புடன் ஆட்சிபுரியும் ஆங்கில அரசாட்சியாளர்க்கும் இவ்விஷயத்தைப்பற்றி எப்போதும் எடுத்துரைப்பதே நம்கடமையாகக்கொள்ளவேண்டும். அப்படி நாம் உழைத்துவந்தால், தம்மோடு சிறிதும் ஸம்பந்தம்பெறாத காட்டுமுரட்டுஜாதியடிமைகளாகிய நீகிரோவர்களை, அவர்களுடைய யஜமானர்களுக்குக் கோடிக்கணக்காகச் செம்பொன் விலைப்பணம்செலுத்திப்பெற்று, தொழும்பர்களுக்கு முழுச்சுதந்தரத்தையும் அன்புடன் அளித்தருளின நமது ஆங்கில ராஜாங்கத்தார் தம்ராஜ்யத்திற் சிறப்புற்றபாகமாகத்திகழும் நம்மிந்தியாவின் கல்வியபிவ்ருத்தியின்பொருட்டு நமக்கு நாள்நாளும் நன்மை தரத்தக்க இவ்வேற்பாட்டினைச்செய்துதவப் பின்வாங்குவார்களா?— ஒருபோதும் மாட்டார்கள். பிரஜைகளிடத்துப் பேரன்பும் கூரறிவுமுடைய மாட்சிமையோங்கும் மன்னர்சிகாமணியாகிய ஐந்தாம்ஜார்ஜ் அரசர்பிரான் நமது வித்யாபிவிர்த்தியில் மிக்க அனுதாபங்கொண்டிருக்கிறார் என்பதும் யாமனைவரும் நன்கறிந்ததன்றே. நமது முயற்சிமாத்ரம் சோர்வுபடாதிருக்குமேல், இத்துணைப்புறச்சாதனங்களுஞ் சேர்ந்து திருவினையாக்குமென்பது திண்ணம் திண்ணம், மும்முறையுந்திண்ணம். இந்நன்னோக்கம் ஈடேறுமாறு திருவருள்சுரக்க.

சங்கத்திறையவராய்ச்சங்கத்தமிழுகந்து
துங்கஅகப்பொருளுந்தோற்றுவித்துப்—பொங்குபுகழ்ப்
பாண்டிவளநாடாள்பரமன்சொக்கேசனைநாம்
வேண்டித்துதிப்போம்விழைந்து.

வே. முத்துஸாமி ஐயன் எம். ஏ. எல். டி.

“சொற்பொருட்காரணம்”

—(o)—

நேரிசையாசிரியப்பா.

தமிழ்க்கேநாளும்தவஞ்செய்துசெய்தூங்
கமிழ்தெனவுண்ணும்அரும்புலவீர்காள்
ஒவ்வோர்சொல்லின்ஒளிர்முதனிலையைச்
செவ்வனமோரில்திகழுமக்காரணம்
வரையினைக்கல்லிமணிபெறலெளிதாம்
உரையினைக்கல்லியுணர்வதோஅரிதே
மற்றதுகல்லின்வறப்பினும்வறக்கும்
சொற்றெறுங்காரணம்தோன்றுதிருந்தில
கல்லினைவல்லேகல்லுதலாகும்
சொல்லினைக்கல்லப்பல்லவாம்நாள்கள்
பல்லவாயினும்படுபயன்
எல்லையில்லவாம்இன்பமும்பெரிதே.

(க) ஆம்பல் = யானை.

ஆம்பலென்னும்சொல்லுக்கு யானையென்னும்பொருள் எவ்வாறு வந்ததெனின் ஆம்பலென்பது இசையாதலாலும் யானை இசைக்கு மகிழ்ந்து அடங்கும் இயல்பினதாதலாலும் அச்சம்பந்தம்பற்றி ஆம்பலென்னும்சொல்லுக்கு யானையென்னும்பொருள்வந்தது. யானையை புணர்த்தும் வழுவையென்னும்சொல்லுக்கும் இப்பொருளேயாம்.

வளுவை வழுவையாயிற்று. வள் = இசை; வை பெயர்விகுதி.

“நிலவுவெண்கரிவணக்கியநிகரில்யாழ்தழுவி
மலருமின்னிசையெழுப்புவர்மேனிலமகளிர்”
(தணிகைப்புராணம். நகரப்படலம்.)

என்பதால் தெளிக.

வழுதி = பாண்டியன்; வளுதி—வழுதி.
வள் = இசை; தி பெயர்விகுதி.
தமிழிசைகேட்டுமகிழ்வோனென்பது பொருள்.
வண்டு = இன்னிசைசெய்வது. வள் + து.
வண்டு சங்குமாம்.

(உ) கடிவை=யானை.

யானைக்கு மதநாற்றமிகுதியாதலால் அதற்குக் கடிவை என்னும் பெயர்வந்தது.

கடி=மதநாற்றம். வை—விகுதி.

"விலக்கருங்கரிமதம்வேங்கைநாறுவ" (க—ராமாயணம்.)

கவுலென்பது யானைக்கதுப்பையும் யானைமதம்பாயுமிடத்தையும் தீநாற்றத்தையும் உணர்த்திநிற்கும். யானைமதம் தீநாற்றமுடையது. கவுல் கவுளாயிற்று.

(ங) யானை.

யானைக்கு ஞாபகசக்திமிகுதியாதலால் அதற்கு அப்பெயர்வந்தது. ஞாபகசக்தியாவது மறவாமை. தலைமாணுக்கருக்கு இக்குணம் ஆவசியகமாதலால் யானையை அவர்க்கு உவமைகூறுவர். ஆனை யானையாயிற்று. ஆனம் ஆனையாயிற்று. *ஆனம்=அறிவு, நினைவு.

(ச) ஐயவி=கடுகு.

ஆயாவி ஐயவியாயிற்று.

ஆயாவி—அய்யவி—ஐயவி.

ஆயாவி—ஆவாலு=கடுகு. (தெலுங்கு.)

பதார்த்தங்களுக்கு மணந்தருவதென்பது பொருள்.

ஆ+யாவி. ஆ—உபசர்க்கம். ஆமுட்டி என்பதுபோல. ஆவி—யாவி.

ஆவி=மணம். நாவி—ஆவி. ஒற்றினீக்கமென்னும் இலக்கணம். நாவி=கத்தூரி.

(ரு) வெல்லம்.

வேலம் வெல்லமாயிற்று. வேலம்=கரும்பு. கருப்பஞ்சாற்றாலாவதென்பது பொருள்.

வேலம்—வேலை=கரும்பு. வேல்—வேலம். மூங்கிலினமென்பது. வேல்=மூங்கில்.

வேலம்—வேளம்—வேழம்=மூங்கில், கரும்பு, கொறுக்கை, நாணல்.

* மொழிநூல் இலக்கணவியல் கூ௪-ம் பக்கம்பார்க்க.

(௬) விருந்து.

வில்லினாற்பொருது வெற்றிகொண்டவீரனுக்கு அரசன்செய்விக்கும் நல்லுண்டி.

வில்—விருந்து. து— பெயர்விகுதி. இம்மரியாதை முதன்முதல் வீரர்தம்குழாத்தினின்றுதான் உண்டாயது.

(எ) கச்சேரி.

மணியிசையால்அறிந்து நீதிநடாத்தும் இடமென்பது பொருள். கச்சம்=மணியிசை.

"ஆடுங்கடைமணிநாவசையாமல்அகிலமெங்கும்
நீடுங்குடையைத்தரித்தபிரான்"

என்பதால் தெளிக. கச்சி என்பதற்கும் அப்பொருளே. கச்சி=காஞ்சீபுரம்.

(அ) கந்தை=கிழிந்ததுணி.

வீரர்கள் சண்டைசெய்யுங்கால் அவர்தம்மார்ச்சட்டையை அம்பு துளைத்துக்கொண்டு உருவிப்போதலின் அத்தகையசட்டைக்கே கந்தையென்றுபெயர்.

காண்டம்—கண்டை—கந்தை.

காண்டம்=அம்பு. மூங்கிலாலாயது.

காண்டம்—கந்தல்.

பக்கம் பக்கல் என்பதுபோல ஈற்றில் லகரமெய்பெற்றது.

(௯) பிழை=குற்றம்.

கள்ளுண்பதாலாவதென்பது பொருள்.

பிழி பிழையாயிற்று.

பில்—பிளி—பிழி=கள். உள்ளிருந்துகசிவது. பில்=உட்டுளை.

பிழி—பிழிதல்=உள்ளிருந்து சாரமிரக்கல்.

பிழை—பிழைத்தல்=பிழைசெய்தல்.

பில்—பிளிறு=சேறு. உள்ளிழுப்பது.

(௧௦) தொடுவு=உணவு.

கையினால் உழுந்துண்பதென்பது பொருள்.
தோள்—தொடுவு. தோள்=கை.

"இரவார்இரப்பார்க்கொன்றீவார்கரவாது
கைசெய்தூண்மாலையவர்"

(௧௧) நெருப்பு.

நெல்—நெருப்பு. மூங்கிலினுண்டாவதென்பது.
நெல்=மூங்கில்.
நெல்வேலி=வேணுவனம்.

நெல்:—

௧—மூங்கில்
உ—தானியம். மூங்கிலினமென்பது.

(௧உ) இயம்=இசை.

"நரம்பியல்சுருதிபாடல்இயத்தொடுபெடிந்துநண்ணித்
திரம்பயினடனமூன்றும்செவ்விதிற்புரியலுற்றார்"

(காந்தம் அசுரகாண்டம்.)

பல்லியம். உ-பதம். பல்+இயம்.

இயம்—இயவு=புகழ். இசையாலாவது.
இயம்—இயம்பு—இயம்பல்=இசைத்தல்.
இசம் இயமாயிற்று. சகரம் யகரமாகும்!
இசை இசமென்பதன் திரிபு.
இசம்—ஏசம்=வெண்கலம். இனிதிசைப்பது.
இயம்—ஐயம்=பிச்சை. இசைபாடி இரப்பது.

ஐகார ஈற்றுச்சொற்கள், ஓர்காலத்து மகர ஈற்றுச்சொற்களாக இருந்தனவெனக் கொள்ளவேண்டும்.

(௧௩) பில்=முளை, கருப்பம்.

பில்—பீர்=முலைப்பால். கருத்தரிப்பதாலாவது.
பீரம்= ,,

"பீரம்பேணிற்பாரந்தாங்கும்"

பீர்—பீரித்தல்—பீச்சல்.
பீர்—பிரை = ஓர் பீரள்வாகியமோர்த்துளி.

"பிரையிடமோர்கொடு"

பில்—பீனம்:—

க—பருமை. கருவளர்ச்சியாலாவது.
உ—பாசி. நீரிலுண்டாவது.

பீனம் ஆண்குறியுமாம். கருவுண்டாக்குவதென்பது.
பில்—பீள் = கருப்பம்.

பீளா = சனனுசூசம். (பாளி)
பீடா—பீடை.

பீள்—பீட்டை = பயிரிளங்கதிர்.
பில்—பில்ல = குழந்தை. (தெலு)

பில்லக = குழந்தை, விலங்கின்பிள்ளை.

பில்—பிள்ளை. (பாளி)

(கச) புளம் = கடல், நதி, நீர்.

மரம் நீரிற் கிடந்தமையாற் புளபுளெனப்போயிற்று.
புளம்—புழ = நதி. (மலையாளம்)
புளம்—புடம் = பூமி. கடல்சூழ்ந்தது.

புடை = இடம். பூமிசம்பந்தமானது.
புடங்கு = பக்கம்.

புடம்—புடவி = பூமி. வி விகுதி.
புடம்—புணம் = நீர்.

டகரம் ணகரமாகும்.

புணம்—புணல்—புனல் = நீர்.

புணரி = கடல்.

புணம்—புணை = தெப்பம். கடலிலோடுவது.
புணல்—புணர்தம்—புனர்தம் = புனர்ப்பூசம். சலராசிக்குரியது.
புணர்தம்—புணர்தை = பூசம். கடகம் சலராசி. ,,

புளமென்பதற்கும் ஓர் முதற்சொல் உள்ளது.

பில் ,, ,, ,,

(கரு) குளம்=முளை, இளமை, தளிர்முதலியன.

குளமான்=ஆட்டிளங்குட்டி.

"குட்டியும் குளமானும்"

குளம்—குழ=இளமை. குழவு=இளமை. குளி=குழந்தை. குளிகுளித்தல்=மகப்பேறு.

குழவி=குழந்தை.

குழந்தை=இளம்பிள்ளை.

குழகு=இளமை.

குழகு—கொடுகு=பிள்ளை. (தெலுங்கு)

குளிந்தியம்மை

குளிகன்=சனியின்பிள்ளை.

(கசா) குளம்=தளிர்.

குளம்—குளகு=இலை.

"மறிகுளகுண்டன்னமன்னுமகிழ்ச்சி"

குளம்—குழை=தளிர்.

(கஎ) குளம்=திரட்சி, வட்டம்.

குளம்—குழவி=அம்மிக்குழவி. திரண்டிருப்பது.

குளம்—குழை=குண்டலம்.

,, கூழை=திரட்சி. கூழைப்பலா.

,, குழங்கல்=திரண்டமாலை.

"குழங்கல்வேட்டுவக்கோதையராடலும்"

(கஅ) கருவை=முளை.

கரு+வை. கரு=முளை. வை விகுதி.

கருப்பொருள்; கருக்காய்.

கால்—கரு. கால்=முளை.

"கருவையார்வயற்சங்குசேர்கலிக்காழியே" (ச—தே)

(கக) ஏ=அம்பு.

ஏவு:—

க—அம்பு.
உ—வருத்தம்—அம்பினாலாவது.

ஏவம்=வருத்தம்.
ஏவு—எவ்வி=அரசன். அம்பில்வல்லவன். வேளெவ்வி.
ஏமாறல்=ஒருவர்க்கொருவர் அம்பினைமாறிவிடுதல்.
ஏமாற்றல்=அம்பெய்யும் திறத்தினால் மயக்குதல்.
எத்து=அம்பெய்யும் உபாயம்.
ஏ—எய்=முட்பன்றி.
எய்—எயில்=மதில். அம்பு எய்தற்கிடமாவது.
எயின்=வேடச்சாதி.
ஏயர்=படைத்தலைவர்.
ஏயர்கோன்கலிக்காமநாயனார்.

(உ0) எருவை.

எரு+வை. எரு=சிவப்பு. வை—விகுதி.
எருபு=சிவப்பு. (தெலுங்கு) பு. விகுதி.
எருவை:—

க—சிவப்பு.
உ—உதிரம்—சிவந்தது.
ந—போர்க்களம்—செங்களம்.
ச—யானை—செங்களத்திற் போர்புரிவது.
ரு—கழுகு—செங்களத்திற்சூழ்வது.
சா—கழுதை—பொருதபின் உழுதற்குரியது.

(உக)

ஏனாதி:—

க—படைத்தலைவன்.
உ—மந்திரி—படையிற் சூழ்ச்சிகூறுவோன்.
ந—மறவன்.
ச—நாவிதன்-சைனியத்தில்மாத்திரம் தொழில்செய்வோன்.
மற்றும் மொழிநூலால் அறிந்துகொள்க.

இங்ஙனம்,
மாகறல். கார்த்திகேயமுதலியார்,
கெண்டி, சென்னை.

ராமசரிதப்பாட்டு. (மலையாளகாவியம்)

ராமசரிதப்பாட்டு என்னும் ஒரு சிறந்த மலையாளகாவியம் மலையாளத்தையாண்ட ஓரரசனுலியற்றப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அதற்கிணங்க, அவர்குலதெய்வமாகிய பத்மநாபன்விஷயமாகக் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டிருக்கிறது. இக்காவியம், இதுகாறுங்கண்டவற்றுள் மலையாளபாஷையிற் பழமையானதாயிருக்கிறது. இதனுடைய காலம் இதுவரை வரையறுக்கப்படவில்லை. பாஷையைபுற்றுநோக்கும்பொழுது மிகப்பழையதென்றேவிளங்கும்; அதாவது, 400 500 வருடங்கட்குமுற்பட்டதென்னலாமென்று தோன்றுகின்றது. இக்காவியம் படலம்படலமாகவகுக்கப்பெற்று, ஒவ்வொருபடலமும் 10, 11, 12 பாட்டுக்களுடையவாய், பலவிருத்தங்களிலும்யாக்கப்பெற்று, அந்தாதித்தொடையா யிபற்றப்பட்டுள்ளது. இதைத் தமிழ்க்காவியமோ மலையாளகாவியமோவென்று நிர்ணயிக்கவியலாது. சிற்சில பிரயோகங்கள் மலையாளத்தையொத்திருப்பதாலும், இயற்றப்பெற்றநாட்டைக் கொண்டுமே இது மலையாளகாவியமென்னவேண்டுமேயன்றி உற்றுநோக்கின் முற்றும் நற்றமிழாதல் தெற்றெனவிளங்கும். இதனையே மலையாளத்தார் மலையாளபாஷையென்கிறார்கள். மலையாளமென்றொரு தனிப்பாஷையில்லையென்றும், அது பழந்தமிழேயென்றும் முன்னரே விளக்கியுள்ளேன். ஆதலாற் பின்னும் எழுதுவ தனுவசியமென்று விடுத்து, அடியில் எடுத்துக்கொண்ட ராமசரிதத்திலிருந்து இரண்டு படலம்* தமிழ்நேயர்கள் படித்தறியும்வண்ணம் கொடுத்துளேன். அதனை யவற்றுனு முணர்வாராக.

I. கணபதிபடலம்.

கானனa†ங்களிலரன்களிறுமாய்க்கரிணியாய்
காலகடுக்கயுமமை(மை)தம்மில்விளையாடிநடந்ந(த)ன்
ஞு(று)னனம்வடிவுள்ளா(ன)ன(னே)புருவாயவதரித்
த(ா)தியே! நல்லவிநாயகனென்னே(றே)ரமலனே!

---

* இவை, பிரும்மஸ்ரீ S. பரமேசுவரையர் எம். ஏ., பி. எல்., அவர்களால் முதன்முதல் பாஷாபோஷிணியென்னும் மலையாள மாசிகபத்திரிகையி லச்சிடப்பட்டன. அதினின்று இவ்விடத்திலெடுத்தெழுதப்பட்டன.

† தடித்த எழுத்துக்களை அரைமாத்திரை குறைத்தொலிக்க.

ஞா(யா)னிதொன்னு(று)துனி(ணி?)யின்னதினென்மானதமென்னும்
நாளதார்தன்னில்நிரந்தரமிருந்தருள்தேரிந்
தூனமற்றறிவெனக்குவந்நு(து)திக்கும்வண்ணமே
ஊழியேழினும்நிற(றை)ந்தமற(றை)ஞ்ஞானப்பொருளே! (1)

ஞானமென்கல்விளயி(ளைவி)ச்சுதெளியி(வி)ச்சினியசொல்
நாயிகே!பரவ(வை)யில்திர(ரை)கள்நேருடனுடன்
தேனுலாவினபதங்கள்வந்நு(து)திங்ஙிநியதம்
சேதயில்துடர்ந்நு(து)தோன்னு(று)ம்வண்ணமின்னு(று)முதலாய்
ஊனமற்றெழுமிராமசரிதத்திலொருதெல்
ஊழியில்செ(சி)றியவர்க்கறியுமாறுர(ரை)செய்வான்
ஞா(யா)னுடக்கினதினேணநயனே!நடமிடென்
னுவிலிச்ச(சை)யொடுவெச்ச(வைத்த)டிபிண(ணை)க்கமலதார். (2)

தாரிணங்கினதழைக்குழல்மலர்த்தய்ய(தைய)ல்முலைத்
தாவளத்திலிள(ளை)கொள்ளுமரவிந்தநயநா!
ஆரணங்களிலெங்ஙு(கு)ம்பரமயோகிகளுமழ்
நா(தா)லுமென்னு(று)மறிவானரியஞானபொருளே!
மாரிவந்ததினு(தினுக்கு)மாமல(லை)யெடுத்துதடயும்(தடையும்)
மாயனே!அரசாளுய்ங்கிசிசராதிபதியெ(யை)
போரில்நீமுல ஊம்முடித்தம(மை)யெடுத்துர(ரை)செய்வான்
போகிபோகசயனா!கவியெனக்கருள்செய்யே! (3)

அருவ!பாதியுருவாயபரனே!சரணதா
ரககுருந்துகொடுத(ச)ந்ததம்நின(னை)ந்துகொள்ளுவோர்க்.
கரியவன்பிறவியாம்துயரறுத்துகள(ளை)வோ
ரசுரநாசகரனே!விசயன்வில்தடிபினால்
திருவுடம்புட(டை)யுமாறற(றை)ஞ்ஞ(ச)வன்னபிமதம்
தெளுதெளுப்பில்விள(ளை)யி(வி)ச்சுதெளியி(வி)ச்சசிவனே!
அரசனுகிமதுசூதனனிராவணனெ(னை)வென்
ன(ற)வ(வை)யெனக்குபுகழ்வான்வழிவரம்தந்ந(த)ருளே! (4)

வழியெனக்குபிழ(ழை)யாதெ(த)வண்ணமுற்றருள்செய்யேன்
மனகுருந்திலிள(ளை)கொண்டுபுனல்கொண்டுவடிவாண்
டெழுந்ந(த)கொண்டல்பதறும்நெறிதழ(ழை)த்தக்குழலி!
யிளமதிக்குதுயர்பொங்ஙி(கி)விள(ளை)யி(வி)க்கும்நுதலி!
சுழலநின்ன(ற)கிலலோகம்வணங்ஙி(=நு=கு)ன்ன(=கின்ற)கழலி!
துகில்புலித்தோலி(ல்)கொள்ளுந்ந(=கின்ற)ரனு(=க்கு)தெல்(?)
டழிவுவந்ந(த)மலர்வில்லெழுமநங்கனனெ(னை)யவ் [கண்ணிடபெ(ப)ட்
வளவுதோற்றினபெரி(பெரு?)ப்பமுள்ளவைப்பின்(வெர்ப்பின்?)ம
[களே! (5)

மகரகேதனனுடை(டைய)சனகனுயர்மகனுய்
வாருமெங்கள்மறிமாயன்மணிமார்வில்விள(ளை)கொண்
டகிலலோகங்ங(க)ளிலும்நிற(றை)ஞ்ஞு(ந்து)நின்னருளுவோ
ரமலகோமளபயோதிதநயே! அரசனுய்
செ(ச)கங்ங(க)ளேழுமுலயிக்குமங்நிசாசரவரன்
சிரங்ங(க)ள்பத்துமங்ங(க)றுத்தமனுவீரசரிதம்
புகலுமென்னெ(னை)யுன்னிநோக்கியருள்வாக்குட(டை)யவேல்
(பெருவு?)சேலிடஞ்ஞி(டைஞ்சு?)புன்றினகட(டை)க்கண்முன
(னை)யால். (6)

இடஞ்ஞு(டைஞ்சு)தானவரெ(ரை)வேரறமுடிக்குமடல்வன்
பியலுமிந்திரனுமங்கியமனும்நிருநியும்
குடிலவாரிபதிவாயுவளகேசனரனும்
குளு(ளி)ர்நிலாமதிவெய்யோனுமுரகாதிபதியும்
வடிவுசேரவனிமாதுமயனும்விண்ணவரும்
மகிழுநாசினியும்முக்கண்ணர்கனல்க்கண்ணிலெழும்
கொடியவைரவியுமானனங்களாறுள்ளவனும்
குது(சு)மவா(பா)ணனுமெனக்குதுண(ணை)யாகயிதினே. (7)

துண(ணை)யெனக்கிதினுமிக்கவருமுள்க்கனமறச்
சுறுங்ங(கி)ஞோருகுதியென்ன(ற)திஞ்ஞு(ந்து)நல்லவரெல்லாம்
பணியிதக்கிவனெனக்குருதிஞெய்யவர்களோ
பக(கை)யராவதினறப்பரென்ஞெடொப்பமுட(டை)யோர். (8)

மேத(தை)நல்குககவீந்திரரில்முன்புட(டை)யவான்
மீகியும்பின்னே(னை)வியாதனுமெனி(ன)க்கதிகமாய்
வேதவித்துநல்லகத்தியஞெரோபதங்ங(க)ளெ(ளை)
வேரிதழ்க்கினதமிழ்க்கவிபட(டை)த்தமுனியும்
ஓத(தை)யில்த்துயிலுமண்ணல்விண்ணுளார்புகழவே
ஊழியில்தெ(த)யரதன்தநயனுயவதரித்
தாதிகாலமுள்ளரி(ரு)ந்தொழில்கள்மிக்கவ(வை)கழஞ்
ஞாழி(சாழி)மானினியெ(யை)மீண்டபடிகூறுவதினுய். (9)

ஆழிமாதினெ(னை)நிசாசரவரன்கவர்ந்ந(து)கொண்
டாடிமாதங்ங(க)ள்வருமுன்னம்மறந்தவழியே
ஊழிமீதுநடந்ந(த)ந்நு(று)கபிமன்னனுறவா
யோடிநாடுகெனவேயரிகள்நாலுதிச(சை)யும்
கீழும்மேலும்வினவின்னளவில்வாயுதநயன்
கேடில்லாதமதியோடுதிர(ரை)யாழிகடந்ந(த)ம்
மாழ(ழை)நீண்விழியெ(யை)மைதிலியே(யை)நேடியோரிரா
மான்புன(னை)ந்தவ(வை)புர(ரை)ப்பதினரிப்பமெங்களால். (10)

மான்புன(னே)ந்தவனண(ணே)ந்தறிஞருளங்குலியவும்(யும்)
மால(லே)வார்குழலிலேறம்மணிகைக்கொள்ளும்முன்னே
வேல்பொருந்ந(கின்ற)மி(வி)ழியாள்க்குநல்கியப்போபொழுதிலே
மேதில்(யில)வீழ்ந்தடிபணிந்துவிட(டை)யும்தொழுதுபோய்
சேல்பொருந்துமரிவீரனல(லே)யாழிகடந்ந(த)த்
தீரமெய்தியிருந்நோ(தொ)ண்கபிகள்சூழ்ந்தினியபைம்
பால்பொருந்தும்மொழியால்மொழிந்தனன்தொழுதெல்லாம்
பார்மன்னன்தன்னோடுமைதிலிபுடெ(டை)சரிதமே! (11)

---

2. ராவணபிரலாபபடலம்.

உரைத்ததுகேட்டநேரம்உயிர்பிரிந்தவரைப்போலே
கருத்துகேடுட(டை)யனுகிக்கண்புனல்கனம்சொரிந்து
குருத்தத(ச)ந்தாபத்தோடேகொடுப்பமப்பொழுதுகைவிட்
டரக்கர்கோனுடலமொக்கெயல(லே)க்குமாறுலகில்வீழ்ந்தான். (1)

வீழ்ந்தவன்மோகம்மெல்கிமெல்லெழுந்துணர்ந்திருந்து
தாழ்ந்தவொண்கரங்கள்கொண்டுதரந்தரம்சிரங்கள்தாங்கி
சூழ்ந்துநின்றரக்கருள்ளம்துல(லே)யுமாறிருவரும்கீழ்
வாழ்ந்தமைபுலம்பிமேன்மேலழுகு(கி)தாயுர(ரை)க்கப்புக்கான். (2)

உரைப்புகள்த்தொழில்களெல்லாமொன்றுநானறிகவல்லேன்
தரிப்பெழுமியக்கர்சித்தர்தானவர்வானோர்வேந்தர்
ஒருத்தராரிவரில்நின்னோடோடுவதொழிந்துபோரில்
கருத்தராய்நின்றுயிர்த்தோர்கழிந்தநாளரக்கர்வீரா! (3)

வீரர்போரிடவணங்கும்வீரனே!குலிசமேற்றுன்
தீரத(தை)பெருகும்மாற்றூர்திறமறயடக்கும்நின்னெ(னே)
போரிடயிராமனம்பால்பலசகலங்களாகென்
னுரிதுசாபமிட்டோரரக்கர்தன்குலக்கொழுந்தே! (4)

அரக்கர்தன்குலத்தினுள்க்கேடுதிக்கவும்வருத்திவானோர்
புரத்தினும்முனிவர்க்கும்போர்புணர்த்தமன்னவர்க்குமெல்லாம்
ஓரிக்கவும்வருத்திநீபோயொளிச்சு(ச)தெத்திச(சை)யில்மற்று
றொருத்தரித்தரமிரி(ரு)ப்போருடப்பிறப்புலவியுள்ளோர்? (5)

உலவியென்னு(று)டலிவில்லாஉர(ரை)பெறும்நகரிலில்லா
இவிடைமைதிலியிருந்துமினியொருகருமமில்லா
சிவ!சிவ!வெறுப்பவந்துசெம்மேநின்முடிவினாலே
அவனியேழிரண்டினும்ஞா(யா)னதிபதியாயிதென்றும் (6)

என்றுமேயறியவல்லேனிம(மை)யவர்திமிர்ததுமர்த்தும்
வென்றிசேர்பற(றை)யறைந்தும்மேதில்(யில்)நீவீழ்வதின்முன்
இன்றெனக்கிடர்முழுத்துமிலங்க(கை)யில்முறைநிறைந்தும்
வன்றிதுமாற்றார்கூப்பும்வன்பெழும்மேருதோளா! (7)

மேருமாமல(லை)துளங்கவிளங்கினகரங்கள்தங்கும்
சூரர்கோனிராமனோடுதுடங்கினபக(கை)விடென்று
வீரனுமளயிரந்தால்விபிழ(ஷ)ணனவனைக்கைவிட்
டாருமுற்றவருமீன்றியாயினேன்னுலகிலின்றே. (8)

இன்றுஞா(யா)னிராமன்தன்னெ(னை)யிள(ளை)யவன்னோடும்கூட
கொன்றுதின்றரிகுலத்தே(தை)குதர்ந்துபோர்க்களத்தில்வீழ்த்தி
சென்றுபோர்கிடைத்துவானோர்திறவுமொட்டினியடக்கி
யென்றியேனில்லாகண்ணீரார்க்குமிந்நகரியென்றான். (9)

நகரிதன்கண்ணினீரைநலமெழத்துட(டை)யக்கின்றேன்ஞா(யா)
ணிகலில்நின்றினியென்றெல்லாமிராவணனியச்ச(சயைத்த)க்கே
முகிலொலிபதறும்சொல்லால்முனிந்தவன்தனயன்மாரில்த் [ட்டு
திகபதமுட(டை)யனாயதிரிசிராவிதுமொழிந்தான். (10)

மன்னனே!விரிஞ்சன்தந்தான்வரங்கள்நீயிரந்தவெல்லாம்
முன்னமேதேரும்வில்லும்முரங்கிளர்கவசத்தோடே [னென்றா
பின்னேநின்னுட(டை)வாள்தந்தான்பிற(றை)யணிசட(டை)யோ
லென்னதுகுற(றை)வுசெல்வானிராமனெ(னை)யிகலிலய்யா? (11)

து. அ. கோபிநாதராவ், எம். ஏ.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

பதினான்காம்வருஷோத்ஸவ மங்கலவாழ்த்து.

பூமகளும்பாமகளும்பொற்பினொடுவந்துறையும்
தேமலிசெஞ்சோதிதினமொளிரும்—காமலியும்

நான்மாடக்கூடலெனநண்ணுபெயர்பூண்டுமஞ்ஞு
யான்மாடக்கோடியணிநகரிற்—சேன்மலிதன்

சக்குவினால்நோக்கித்தன்குஞ்சுகளின்தாபத்தை
யக்கணமேதீர்க்குமதுநிகர்த்தித்—தொக்கதளப்

பங்கயத்தோன்அண்டத்துப்பல்லுயிரும்பார்த்தளிக்கும்
அங்கயற்கண்அம்மையபிராமி—செங்கையிடம்

மானேந்துமீசன்மனத்தேயெழுதிவைத்துத்
தானேர்ந்துபார்க்குமுயிர்தங்குசித்ரம்—தேனேந்தும்

செந்தமிழினாய்ந்துதேர்ந்தசுவைநற்றொழும்பர்
புந்தியெனுங்கோயிலுக்கோர்பொற்றீபம்—சிந்திக்கும்

காலத்தொடுகற்பனையுங்கடந்தகரு
வூலத்திறைவன்வைத்தவொண்ணிதியம்—சீலத்துப்

பாண்டியர்கள்முன்சேரசோழர்களிற்பன்னலமும்
ஈண்டியேயேற்றமுறவெண்ணித்தாம்—நீண்டபல

நாளும்புரிந்ததவநற்பயனாவிவ்வுலகை
யாளுமலையத்துவசற்கற்புதன்சேர்—வேள்வியினிற்

பெண்மகவாய்வந்துதித்துப்பெட்பினுடனேயிந்த
மண்மகிழத்தூயோர்மனந்தெளியத்—திண்மையுறுஞ்

சைவந்தழைக்கத்தமிழ்தழைக்கவிவ்வுலகிற்
றெய்வமிலதென்பார்திடுக்கடையத்—துய்ய

மறைவிளங்கவானம்மழைவழங்கப்பாவின்
றுறைவிளங்கநன்னீதிதோன்ற—அறநெறியாற்

பூமண்டலமுழுதும்போற்றிப்புரிபோரிற்
கோமன்றவேவிஜயங்கொண்டுபுகுந்—தேமசபைப்

பெம்மான்கருணைப்பெருமான்ஒருமான்கை
அம்மான்கயிலையடைந்தவற்கண்—டம்மா

இவன்கணவனென்னவெள்கியேத்தியினிதே
சிவன்கருதியேற்கமணஞ்செய்து—கவின்கொள்

முடிகவித்துத்தன்னரசுமுற்றுங்கொடுத்துக்
கடிமிகுத்தெண்மாதிரமுங்காத்துப்—படிபுகழ

உக்கிரபாண்டியனையீன்றிவ்வுலகாளத்
தக்கவவற்கரசுதந்திடலும்—அக்குரிசில்

தானுமவன்குலமுந்தக்கபரிசேயினிய
தேனுமுயர்பாகுமின்பத்தெள்ளமுதும்—மானுகின்ற

முத்தமிழ்ச்சங்கத்தைமுறையேமதுரையெனும்
இத்தலத்தேதாம்வளர்த்தவற்றம்போல்—அத்தகவே

யுக்கிரபாண்டியனென்றோதும்பெயர்படைத்தோன்
மிக்கபுகழ்மாமுகவைவேந்தனுஞ்சீர்—தொக்கதிறன்

மாமுத்துராமலிங்கசேதுபதிமன்னனொடு
சேமத்துமுன்னுதித்தசீதரனும்—பேர்மிக்க

மால்பொன்னுச்சாமிவரோதயன்றன்செம்மலாய்
நூல்மன்னுபல்விஷயநுண்மையுஞ்சேர்—பால்மன்னும்

பன்னூற்றிரட்டளித்தபாண்டித்துரைக்குரிசில்
பன்னூற்றின்மேலாம்பரன்கோயில்—தன்னூடு

தோன்றிமிகும்அன்பினாற்றோத்திரித்துக்கண்டுபணிந்
தேன்றவகைகோடிசெம்பொன்ஈந்துவந்தே—யான்ற

பலகலையுந்தேர்ந்துபரிதிகுலமோங்க
நிலமதனில்வந்தநிருபன்—நிலவுபுனை

காளையார்கோவிற்கடவுட்குவெள்ளியிற்செய்
காளையாம்ஊர்திதந்தகாவலவேள்—நீளுமிந்தச்

சங்கங்குழுமிடந்தந்துவளர்இவ்வைஸ்கூல்
துங்கமுடன்றோற்றுவித்ததோன்றலாம்—எங்கள்பிரான்

பாற்கரஸேதுபதியுதவிபெற்றுவளத்
தாற்கவின்சேர்நான்காந்தமிழ்ச்சங்கம்—நூற்கியையத்

தாபித்துத்தானேதலைமைவகித்திருந்து
தீபத்தைப்போலத்தினம்விளக்கிப்—பேர்பெற்ற

செந்தமிழ்ப்பாஷைசெழிக்கவளர்த்தென்றனைநேர்
பந்தியுறும்பல்லோர்படித்தறிவுற்—றிந்தநிலை

யெய்தும்படியருளியின்பமுறக்காத்ததன்பின்
செய்திங்கள்மும்மழையாற்சேமமுறுங்—துய்ய

வளம்பெருக்கிவேள்விவகைபெருக்கிப்பத்தி
யுளம்பெருக்குங்கல்வியறிவூக்கம்—தளம்பெருக்கும்

செம்பிநாடென்னுந்திருத்தேவிவாண்முகமென்
றிம்பர்அறிஞர்சொலற்கேற்பவே—பம்பியசீர்

மன்னும்முகவையெனும்மாராமநாதபுர
மன்னனருட்பாற்கரவேள்மைந்தனென—நண்ணி

அருள்வலிமையாண்மையழகறிவுகல்வி
திருமலியுமீகைநண்புதிண்சீர்—பெரிதுபடைத்

தாஸேதிமாவரையும்ஆடிப்புனிதமுறும்
மாஸேதுகாக்கும்மகிபதிவண்—தேசேய்ந்த

புல்லணைநாதற்குப்பொற்புமிகுந்தேரியற்றி
நல்கியுவந்துலகாள்நாயகவேள்—பல்சுகுண

வேந்தன்மதிவாணன்விற்பனன்மெய்க்கீதபதி
சேந்தனெனுந்தீரன்ஜெகம்பணிசீர்—வாய்ந்துபல

பண்டிதர்கள்பல்கோடிபாடிப்பரவுறும்பாக்
கொண்டுசுமந்தோங்குபுயக்கொற்றவன்கற்—கண்டுநிகர்

மென்சொற்குளிரவிழைந்துரைக்கும்பாண்டியனென்
றன்சொற்குதவிசெயுஞ்சந்தனுயர்—இன்சொற்

கவிமாலையந்தாதிவாமிகழற்கட்
புவிராஜர்போற்றப்புனைந்தோன்—கவிராஜர்

கண்டுவக்கும்புந்திக்கடவுள்முத்துராமலிங்கம்
எண்டிசைக்குந்தீபமெனவுதித்தோன்—தண்டமிழும்

ஆரியமும்ஆங்கிலமுந்தேர்ந்தறிந்தஆண்டகைநற்
சீரியநாவலரைத்தேர்ஞான—சூரியனும்

ஸ்ரீராஜராஜேஸ்வரனெனுஞ்சேதுபதி
நேராயிச்சங்கம்நிலைபெறவே—பேராரும்

அக்ராசனாதிபதியாகியினிதாதரிக்கும்
இக்காலத்தேழிரண்டாண்டின்பினிறை—வுற்ற

வருஷோற்ஸவத்திற்சபைத்தலைமைவைகும்
புருஷோத்தமனொருவன்போதத்—தெருளார்ந்த

யாவனெனஆராய்ந்தவனிமுழுதாளும்
காவலன்மெச்சுங்கலைபலதேர்—நாவலனேர்

இங்கிலாந்தென்னும்இறைதன்நகரத்தும்
இங்குலாஞ்சென்னையினும்ஏற்றமுறும்—பங்கில்

உயர்தரக்கல்வியிற்றேர்ந்தோங்குபலபட்டப்
பெயர்படைத்துமேன்மைபெருக்கும்—நயமார்

திவான்பகதூர்என்னுஞ்சிறப்பும்உடன்பெற்
றுவாமதிபோற்றோன்றியுலகோர்—தவாததவப்

பேறாகிக்கல்விநலம்பேணுங்குணக்குன்றம்
மாறாக்கணிதபதிமாண்புபெறக்—கூறுகின்ற

நாற்கவிதேர்பண்டிதனையேராஜநம்பியென்றார்
பாற்கவின்சேர்நாற்பாஷைப்பண்டிதனும்—மாற்குநிகர்

மேலோனையென்னபெயரால்விளம்புவது
நூலோரறிந்துநுவலுவார்—சீலமுடன்
பூமிக்கண்வந்தொளிரும்புங்கவனும்பொற்புமிகும்
சாமிக்கண்என்றபெயர்ச்சற்குணனை—நேமத்
துடனேதெரிந்தழைத்திங்கோகைமிகமேலாந்
திடனுரிவ்வாசனத்துச்சேர்த்திக்—கடல்போல்
அளவிலாப்பல்கலைதேர்ஆன்றவரைக்கூட்டி
உளமுலாந்தேனேர்உரையின்—வளமலிந்த
செய்யபிரசங்கஞ்செய்வித்துக்காதலுடன்
துய்யவரிசையன்னூர்சொற்களித்து—வையகத்தார்
கொண்டாடக்கொண்டாடிவாழ்வுசெய்தான்கொங்குமிக
வண்டாடுமுல்லைமலர்மாலிகையான்—திண்டிறலும்
சந்ததியுஞ்சீருந்தயையும்புனிதமிகும்
செந்திருவும்இன்புஞ்செழித்துவளர்—புந்தியுடன்
நீடூழிவாழ்கநிரந்தரவக்ராசனத்தே
பீடுருஞ்சங்கம்பெரிதுபுரந்—தேடேறுஞ்
செந்தமிழும்இங்கிதனைத்தேர்புலவோருங்குலமும்
சந்தமிகும்ஜார்ஜரசுந்தாமோங்கச்—சந்ததமும்
வாழியமேன்மேலும்மதுரைத்தமிழ்ச்சங்கம்
ஊழிதோறூழியுயர்ந்து.

சுபம்.

இங்ஙனம்,

வி. திருஞானசம்பந்தம்பிள்ளை,

ஸேதுஸமஸ்தானம் மஹாராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிட்,

இராமநாதபுரம்.

புத்தகமதிப்புரை.

1. பகவத்கீதா:—(தமிழ்மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும்) ஸர்வஸம்பிரதிபந்நமாயும், திரிமதபாஷ்யகர்த்தர்களாலும் தத்தம் தர்சனத்துக்கிணங்க வியாக்கியாநங்கள்செய்யப்பெற்றதாயும், ஞானசாஸ்திரங்களிற்சிறந்ததாயும், பகவத்வாக்கியரூபமாயுமுள்ள கீதாசாஸ்திரத்தின்பெருமை இவ்வளவென்றுகணக்கிடமுடியாததென்பது யாவருமறிந்ததே. அது இப்பரதகண்டத்திற்றோன்றிப் பல்லாயிரவருடங்களாகப் பலவேறுசமயத்தாராலும் பயிலப்பட்டுவந்ததுமன்றிப் பலவேறுபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகமெங்கும்பரவிக் கொண்டுவருகின்றது. அம்முறையில் நந்தமிழ்மொழிக்கண்ணும் அது செய்யுள்வடிவாகச்செய்யப்பெற்றும், திரிமதபாஷ்யங்களின் மொழிபெயர்ப்பாக வசனநடையிலெழுதப்பட்டு மிருக்கிறது.

ஆயினும், அம்மொழிபெயர்ப்பிற்றோன்றுதபலபொருள்களும் நன்குதோன்றுமாறு, சிவநேசச்செல்வரும், இலங்கைஇராஜாங்கச் சட்டநிரூபணசபையின் அங்கத்தவரும், வடமொழிதென்மொழிகளில் வல்லவரும், லோகோபகாரசீலருமான கௌரவ ஸ்ரீமான்-பொ. இராமநாததுரையவர்களால் ஒவ்வொரு சுலோகவாக்கியங்களுக்கும் மொழிபெயர்ப்பும், அதற்கு வியாக்கியானரூபமான விருத்தியுரையும் தெளிவான தமிழ்நடையில் எல்லோரும் படிக்கும்படியெழுதப்பட்டு யாழ்ப்பாணத்து நாவலர்கோட்டம் ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களால் நல்லகடிதத்திற் செவ்விதாயச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்துக்குக் கொழும்புநகரில்விளங்கும் மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீமத்-மு. ஸர்வேஸ்வரசர்மா அவர்களால் வடமொழியிலெழுதப்பட்ட அணிந்துரையையும், அதன் தமிழ்மொழிபெயர்ப்பையும்நோக்குவார்க்குத் தத்வக்ஞானசாஸ்திரங்களின் ஸூக்ஷ்மார்த்ததர்சனங்களாலும்மேம்பட்ட துரையவர்களதுபெருமை நன்குவிளங்கும். இத்தகையபெருமைவாய்ந்ததுரையவர்கள் "தாமின்புறுவதுலகின்புறக் கண்டு, காமுறுவர்கற்றறிந்தார்" என்னுங்குறளுக்கிலக்கியமாய், அவர்கள் அருமையாய் ஆராய்ந்துணர்ந்த நுணுகிய அரும்பொருள்களை எல்லோரும் எளிதிலுணருமாறு இப்புத்தகத்தையெழுதியுபகரித்தபேருதவிக்குத் தமிழுலகம் நன்றிபாராட்டக்கடமைப்பட்டுள்ளது. இதன்விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப் பெறலாம்.

2. அரும்பொருட்டிரட்டு:—இது மதுரை நேட்டிவ்காலேஜின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களால் இக்காலத்து ஆங்கிலகலாசாலைமாணவர்களுக்குத் தமிழ்கற்பிக்க விரும்பும்பாடபுத்தகங்களின் முறையைத்தழுவி யெழுதப்பட்டிருக்கிறது.

இதன் முற்பாகமாகச் சேர்க்கப்பெற்றிருக்கும்பாடல்கள் பலவும், அன்பு, நட்பு, நன்றியறிதல்முதலிய நற்குணங்களைமேற்கொண்டு பல சந்தர்ப்பங்களிற் றக்கோரைப்பற்றிப்பாடிய பாடல்களாகவும் மற்றுஞ் சில அரியகருத்துக்கள்டங்கிய ஆங்கிலப்பாடல்களின் மொழிபெயர்ப்பாகவுமுள்ளன.

அவையெல்லாம் படிப்பவர்க்கினியவாகவும் பொருள்விளங்குவனவாகவுமுள்ளன. அவை ஐயரவர்கள் தெளிவாகவும் விரைவாகவும் செய்யுளியற்றுந்திறமையுடையாரென்பதை நன்குவிளக்குகின்றன.

பிற்பாகமாகிய வசனநடையில் அருமையான பல பொருட்பாடங்களெழுதப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் பலருமறிதற்குரிய பலவேறுவிஷயங்களைவெளியிடு மரியவியாசங்களாயுள்ளன.

ஆதலால் இப்புத்தகம், படிப்பவர்க்குப் பலவகையினு மறிவுவளர்ச்சியைப்பயப்பிக்கத் தக்கதாயிருக்கிறது.

---

3. ஜீவகாருண்யமாலை:—இது கொன்னையூர்மாரியம்மைபேரில், அமராவதிபுத்தூர் வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ வயி. நா. க. ராம. அ. இராமநாதச்செட்டியாரவர்களாற்பாடப்பட்ட 32 பாடல்களடங்கியது. இதிலுள்ள ஒவ்வொருபாடலும் சிறுதெய்வங்களுக்குப்பலியிடுஞ்சீவவதை, புலாலுண்ணல் ஆகிய இவற்றைச்செய்வோர்மனதில்அவை தீச்செயல்களென்றும், அவிவேககாரியமென்றும் பதியும்படி தெளிவாகவும் செவ்விதாகவும் பாடப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா ஒன்று. வேண்டுவோராசிரியர்க்கெழுதிப்பெறலாம்.

---

4. ஜோதிடகணிதம்:—இது ஜாதககணிதத்துக்கு அங்கமான அஹர்க்கணனம், சூரியாதிநவக்கிரஹஸ்புடம், உபக்கிரஹஸ்புடம், லக்கினஸ்புடம், திதிநக்ஷத்திரயோகஸ்புடம், சுதேசராசிமானம், தசவர்க்கம் கிரகஸமயம் ஆகிய இவையறியும்விதங்களைத் தெளிவான தமிழ்நடையில் வெளியிடுகிறது. ஜாதககணனம் செய்பவர்களுக்கெல்லாம் மிகப் பயன்படத்தக்கது. இதன் விலைமுதலியன தெரியவிரும்புவோர் இதனைப்பதிப்பித்த தரங்கம்பாடி ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளையவர்களுக் கெழுதித்தெரிக.

---

5. பலதீபிகை:—இது மந்திரேசுவரமுனிவரால் வடமொழியிற் செய்யப்பட்ட பலதீபிகையென்னும் சோதிடநூலின்மொழிபெயர்ப்பாக மிளசை பிரும்மஸ்ரீ வேங்கடகிருஷ்ணையரவர்களால் தமிழ்நடையிலெழுதப்பட்டது. இதிலுள்ள இருபத்தாறத்தியாயங்களாலும் ஜாதக பலன்கள்பலவும் அறியுமாறு சொல்லப்பட்டுள்ளன. இதன் விலைவிவர முதலியன அறியவிரும்புவோர் பறங்கிப்பேட்டை அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளையவர்களுக்காவது சு. ஏ. குமாரசாமியாச்சாரி அவர்களுக்காவது எழுதித்தெரிக.

---

6. வான்மீகராமாயணக்கிளைக்கதைகள் :— (இரண்டாம்பாகம்) இது, மயிலை ஸென்தோம் கல்விச்சாலையில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருந்தஸ்ரீமத்-தி.வேங்கடராமையங்காரவர்களால் வான்மீகராமாயணத்தின் ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் என்னும் நான்குகாண்டங்களிலிருந்து இருபத்தொன்பது உபகதைகளைச் சிறுவர்சிறுமியர்க்கும்விளங்குமாறு தெளிவானநடையிலெழுதிவெளியிடப்பெற்றிருக்கிறது.

இதில் இடையிடையே சந்தர்ப்பத்திற்கேற்றபடி கம்பராமாயணத்திலிருந்து 115 செய்யுள்கள் எடுத்தாளப்பட்டிருப்பதோடு அவற்றின் முதற்குறிப்பும், அபிதானவிளக்கமும், பிழைதிருத்தமும் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இது சென்னை ஹைக்கோர்ட்ஜட்ஜாயிருந்த ஸ்ரீமான்-ஸர். எஸ். சுப்பிரமணியஐயர் கே. சி. ஐ. இ. அவர்களுக்கு உரிமைசெய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா எட்டு. இதன் முதற்பாகம் 1906-ல் வெளியிடப்பெற்றிருக்கிறது. வேண்டுவோர் ஆசிரியர்க்கெழுதிப்பெறலாம்.

---

7. **ஸத்தியவிஜயம்** என்னும் ஒரு தமிழ்நாடகம்:—இது திருச்சிராப்பள்ளி செயிண்டுஜோஸப்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் வா. பி. வேங்கடராமசாஸ்திரியாரால் வடமொழியிலுள்ள சண்டகௌசிகம் என்னும் நாடகத்தையும், அரிச்சந்திரகாவியத்தையும் பெரும்பாலும் தழுவி ஏழங்கங்களாக எழுதிமுடிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலைமுதலிய விவரம் ஆக்கியோர்க்கெழுதியறிக.

---

8. **ராஜாமணி**:—இது, இராமதீக்ஷிதர் என்னும் தமிழ்நாவலியற்றியவரும், பேனுகொண்டாதாலூகா ஹெட்அக்கவுண்டெண்டு உத்தியோகத்திலிருப்பவருமாகிய ஸ்ரீமத்-அ. ஹரிஹரையரவர்களால் எழுதப்பட்டதொரு தமிழ்நாவல். இயற்கையில் இக்காலநிகழ்ச்சியிலுள்ள லௌகிக வியவகாரங்களைக்காட்டிய மனோபாவத்துடன் படிப்பதற்கினிமையாயிருக்கும்படி யெழுதப்பட்டுளது. இதன் விலைவிவரம் ஆக்கியோர்க் கெழுதித்தெரிக.

பத்திராதிபர்.